Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி-14 28-06-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 130



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12121)

## தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தும் இறுதிப்போருக்கு ஆணையிடுங்கள்!

### -தேசியத்தலைவரிடம் தீவகமக்கள் கோரிக்கை

(தீவகம்)

பொறுத்தது போதும் பொங்கியெழு தலைவா! தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தும் இறுதிப்போருக்கு ஆணையிடுங்கள் என தீவக பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது.

நேற்று தீவகத்தில் இடம்பெற்ற பேரணியின் முடிவில் தமிழீழத்தேசியத் தலைவர் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் விதிப்படி சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்கள் பிரிந்து சென்று தமக்கென தனிநாட்டை அமைத்துக்கொள்வார்கள். அதுவே தமிழர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, கௌரவம், அமைதியான வாழ்வுக்கு நிரந்தரமஏன தீர்வாக அமையும்.

பௌத்த சிங்களப் பேரினவாதத் தலைமைகள் சிங்களமக்களை ஏமாற்றி இனவாதக் கருத்துக்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மனித உரிமைகள் குறித்து தமிழ்ச்செல்வன்-ஜோ பேக்கர் சந்திப்பு

(கிளிநொச்சி)

மனிதஉரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறுவர் உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் ஜோ பேக்கர் நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்து அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் விவகாரம் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.இச்சந்திப்பின் பின் பேக்கர் அவர்கள் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்குச் சென்று அதன் தலைவர் வணக்கத்துக்குரிய எம்எக்ஸ் கருணாரட்ணம் அடிகளாரைச் சந்தித்தார். இதன் போது வடக்கு கிழக்கு மனிதஉரிமைகள் செயலகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தமிழ்மக்களின் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

## -புலிகளின் தொடரணி மீதான தாக்குதலின்போது-

# இராணுவத்தினரின் நடத்தை குறித்து விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்!

## தாக்குதலின் உண்மை நிலைகுறித்து கண்காணிப்புக்குழு தெரியப்படுத்த வேண்டுமெனவும் புலிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

**வெலிக்கந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தொடரணி மீதான தாக்குதல் சம்பவவேளையில் தரைவழிப்பயணத்தின்போது முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணான வகையில் இலங்கை இராணுவத்தினர் நடந்து கொண்டவிதம் தொடர்பாக கடுமையான அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், இது தொடர்பாகப் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு விற்கு எழுதியுள்ள கடிதத்தில் தற்போது நடத்தப்பட்ட தாக்குதலில் உண்மைநிலையினை தமக்கு வெளிப்படுத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.**

புலிகளின் தொடரணி மீதான கண்ணிவெடித்தாக்குதல் தொடர்பாக அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அனுப்பிய கடிதத்திலேயே மேற்கூறிய கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் முக்கியபகுதிகள் வருமாறு:-

கடந்த 26 யூன் 2005 அன்று வெலிக்கந்தப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். இத் தரைவழிப்பயணத்தின்போது முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணான வகையில் இலங்கை இராணுவத்தினர் நடந்து கொண்டவிதம் தொடர்பாக எங்களுடைய கடுமையான அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை வலுவற்றதாக்குக; ஜே.வி.பி.நீதிமன்றில் வழக்குத்தாக்கல்



(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

கைச்சாத்திடப்பட்டுள்ள ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையை வலுவற்றதாக்குமாறுகோரி ஜே.வி.பியின் மேல்மாகாணசபை உறுப்பினர் வாஸ்குணவர்த்தன கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து அம்பாறையில் நேற்று ஹர்த்தால்

(அம்பாறை)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அம்பாறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளிலேயே இந்த ஹர்த்தால் இடம்பெற்றுள்ளது ஹர்த்தால் நடவடிக்கை காரணமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கிரமித்த பகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேறக்கோரி தென்மராட்சியிலும், தீவகத்திலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள்!



(அலுவலக செய்தியாளர்)

யாழ்குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்துள்ள சிறிலங்காப் படையிரை வெளியேறக்கோரியும், சிங்கள பௌத்த பேரினவாதிகளைக் கண்டித்தும் தென்மராட்சியிலும், தீவகத்திலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பலைகளை வெளியிட்டனர்.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணிகள், வீடுகளில் இருந்து படையினரை வெளியேறக்கோரி தென்மராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று மாபெரும் கண்டனப்பேரணி நடத்தப்பட்டது.

காலை 10.30 மணியளவில் உசன் கந்தசாமி ஆலய முன்றலில் பெருமளவான மக்களும் பாதுகாப்பு வலயங்களுக்குள் முற்றுகை இடப்பட்டிருக்கும் பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்களும் அணிதிரண்டனர். தொடர்ந்து உசன் கந்தசாமி ஆலயத்தில் படையினரை வெளியேறக் கோரி விசேடபூசை வழிபாடு இடம்பெற்றது. அத்துடன் படையினர் உடனடியாக இப்பிரதேசத்தைவிட்டு வெளியேற வேண்டும் எனக்கோரி பஜனைகளும் நடைபெற்றன. தேங்காய்களும் உடைக்கப்பட்டன.

சிங்களப்படைகளே எமது மண்ணைவிட்டு வெளியேறு என கோசம் முழங்க ஊர்வலமானது உசன் பிரதான படைத்தளம் நோக்கி நகர்ந்தது.

அங்கு சிறிது நேரம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன் உசன் சிவில் பொறுப்பு அதிகாரி மேஜர் விஜயரத்தினவிடம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் துரைரட்ணம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து ஊர்வலம் உசன் பிரதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

ச.யாதவகுமார் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் பளைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## சுகாதார மன்றம்

" சுகாதார மன்றம்" இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள சுகாதார மன்றத்தில் துறைசார் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

## கடந்த ஆண்டில் 56 ஆயிரம் குற்றச்செயல்கள் இவற்றில் 11 ஆயிரம் கொடூரமானவை

### —— சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

கடந்த ஆண்டில் சிறிலங்காவில் கடந்த பதினோராயிரம் கொடூரமான குற்றச்செயல்கள் நடந்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ் பிரதம காரியாலயம் தெரிவித்துள்ளது. 1288 கொலைகள், 76 வங்கி கொள்ளைகள். 1560 வாகன கடத்தல் போன்றன இடம் பெற்றன. இது சம்பந்தமாக 5034 குற்றவாளிகளைக் கைதுசெய்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய குற்றங்கள் இன்னும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. நாடுமுழுவதிலும் உள்ள 38 பிரதேசங்களில் 56,313 குற்றச் செயல்கள் நடைபெற்றுள்ளதென்று பொலிஸ் பிரதம காரியாலயம் தெரிவித்துள்ளது.

## திருமலையில் குண்டுத் தாக்கு: முச்சக்கரவண்டிச் சாரதி காயம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத் திலுள்ள காந்தி நகர்ப் பகுதியில் கடந்த சனி இரவு பத்து மணியளவில் இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று உப்புவெளிப் பொலிசார் தெரிவித்தனர். முச்சக்கர வண்டி ஒன்றின் சாரதி ஒருவர் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் காயம டைந்தார் என்று பொலிசார் கூறினர். இன்னொரு சம்பவத்தில் தனியார் பஸ் ஒன்றின் பின்புறம் சேதமடைந்ததாக வும் தெரிவிக்கப்பட்டது. இனந் தெரியாத நபர்கள் சிலரால் மேற் கொள்ளப்பட்ட இச்சம்பவங்கள் தொடர் பாக பொலிசார் விசாரணை நடத்து வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (25)

---

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### சிட்டை ஆய்வாளர் பணிக்கான விண்ணப்பம்கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் சிட்டை ஆய்வாளர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள் :**

01. கல்வித்தகைமை :- க.பொ.த உயர்தரம் (மூன்று பாடம் சாதாரண சித்தி)
02. அகவை :- 25 தொடக்கம் 40 வரை.
03. உயரம் :- 05 அடி 02 அங்குலம்.

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 13.07.2005
02. சம்பளம் :-
    $\frac{3,630-4,730}{10X110}$ + 2,700.00 = 6,330.00 சிறப்புக் கொடுப்பனவு 4,000.00=10,430.00
03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு:- 15.07.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப்படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரக்கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.12239)

---

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### ஓட்டுநர்(பயிலுநர்) பணிக்கான விண்ணப்பம்கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள் :-**

01. கல்வித்தகைமை :- ஆண்டு 08.
02. அகவை :- 23 தொடக்கம் 35 வரை
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்.
04. நிறை :- 55 Kg

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 15.07.2005
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு 17.07.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழக நடுவப்பணிமனையில் நடைபெறும்.
03. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
04. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை, புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள நேரக்கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.12240)

---

## காந்தருபன் அறிவுச் சோலை-சிறுவர் இல்லம்

## பணி நிலை வேண்டுகை

**பதவிகள்:-**

| | |
|---|---|
| 01 | பராமரிப்பாளர்கள்- இரு பாலாரும் (30 வயதிற்கு மேலாக இருக்க வேண்டும்) |
| 02 | கணக்குப் பதிவாளர் -01 (A/L தகைமை தேவை) |
| 03 | ஆசிரியர்கள் - எல்லாப் பாடங்களுக்கும் (A/L தகைமை தேவை) |
| 04 | விஞ்ஞான ஆய்வு கூட ஆசிரியர்-01 (A/L தகைமை தேவை) |
| 05 | களஞ்சியக் காப்பாளர்-01 |
| 06 | சாரதி-01 (இரண்டு வருட அனுபவம் தேவை) |
| 07 | இயந்திரங்கள் இயக்குபவர்-01 |
| 08 | AC,DC மின் இணைப்பு தெரிந்தவர்-01 |
| 09 | விவசாயம், மிருகவளர்ப்பு தொடர்பான பணியாளர்கள்-04 (தொழில் அனுபவம் தேவை) |

**நேர்முகத் தேர்வு:-**

03.07.2005 ஞாயிறு
காலை-9.00-பி.ப 4.00 மணி வரை

**இடம்:-**

காந்தருபன் அறிவுச்சோலை,
அலுவலகம்,
கைவேலி- புதுக்குடியிருப்பு.

**குறிப்பு:-**

01 விண்ணப்பங்கள் நேர்முகத் தேர்வு அன்றே பெறப்படும்.
02 தகைமைச்சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.
03 குறித்த நாளில் தோற்றமுடியாதவர்கள் முற்கூட்டியே அறியத்தரவும்

நிர்வாகச் செயலகம்,
காந்தருபன் அறிவுச்சேலை.

(5943)

---

## AAT கற்கைநெறி மாணவர்க்கான அறிவித்தல்

முகாமைத்துவ கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் AAT கற்கைநெறி கட்டம் I புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் 02. 07. 2005 சனிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. எனவே மேற்படி கற்கைநெறியைப் பயில்வதற்கு பதிவினை மேற்கொண்டோர் விரிவுரைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
முகாமைத்துவக் கல்லூரி.
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

(சி.12141)

---

## சரளமாக ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க
## இ-றஜித் இங்லிஷ்

### புதிய பிரிவு ஆரம்பம்

யூலை-04 ஆம் திகதி பி.ப.5.00 மணிக்கு ஆரம்பம்.
இடம்- பாஸ் அலுவலகம் முன்பாக ,
முல்லை வீதி,
புதுக்குடியிருப்பு.

(6308)

# ஈராக்கில் தொடரும்போரை முடிவுக்குக்கொண்டுவர

# தீவிரவாதிகளுடன் பேச்சுநடத்த அமெரிக்கா திட்டம்!

(வோஷிங்டன்)


**ஈராக்கில் அமெரிக்கப்படையினருக்கு உயிர்ச்சேதம் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து தீவிரவாதிகளுடன் பேச்சுநடாத்தி தாக்குதலை நிறுத்திக் கொள்ளலாமென அமெரிக்கா ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த சில மாதங்களாக தீவிரவாதிகளின் கார்க்குண்டு தாக்குதலில் 1500இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் பலியாகி விட்டனர். இதன்போது அப்பாவிப் பொது மக்களும் ஆயிரக்கணக்கில் பலியானார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்கப்படை அதிரடித் தாக்குதல் நடத்தியும், தீவிரவாதிகளை ஒடுக்க முடியவில்லை. அமெரிக்காவுக்கு உயிர்ச்சேதம்அதிகரித்து வருவதைத் தொடர்ந்து ஏராளமான பணமும் இதனால் செலவாகிறது.

இதனால் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா ஆலோசித்து வருகிறது. பல்வேறு தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஈராக் அரசு மூலம் அமெரிக்கா ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க பாதுகாப்புஅமைச்சர் வோஷிங்டனில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்; ஈராக்கில் தீவிரவாதிகளை இப்போதைக்கு ஒடுக்க முடியாது. தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டம் முடிய இன்னும் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகும். இந்தப் போராட்டம் தொடரும் பட்சத்தில் உயிர்ச்சேதமும் அதிகளவில் இருக்கும். இது அமெரிக்காவுக்கு கவலை அளிப்பதாகவுள்ளது என்று கூறியிருக்கிறார்.

ஈராக்கில் நேற்றுமுன்தினம் ஒரேநாளில் மொசுல் நகரில் தீவிரவாதிகள் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் 38 பேர் பலியானார்கள்.




கென்யாவின் நயிரோபியிலுள்ள மதகுருக்கள் சொந்தமான விடுதியொன்றின் மீது 2002 ஆம் ஆண்டு தற்கொலைத் தாக்குதலுக்குக் காரணமான கென்யாவைச்சேர்ந்த சல்மின்முகமது, சயட்சகர் அகமட்,முகமட் குப்வா செய்ப் ஆகியோர் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றில் நிற்கின்றனர்.



*நீண்ட நாள் சுகவீனமுற்றிருந்த மறைந்த பிலிப்பைன்சின் மணிலா கர்தினாலின் உடலுக்கு அஞ்சலி செலுத்தக் காத்திருக்கும் கத்தோலிக்கர்கள்.*

## சதாம்ஹுசைன் எழுதியநாவல் வெளியீட்டுக்கு ஜோர்டான் அரசு தடை



சதாம் ஷுசைன் எழுதிய புத்தக வெளியீட்டுக்கு ஜோர்டான் அரசு தடைவிதித்துள்ளது ஈராக்கில் சதாம்ஹுசைன் ஆட்சியை அமெரிக்கப்படை அகற்றியதைத் தொடர்ந்து அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். சிறையில் இருந்தபடியே சதாம் ஹுசைன் ஒரு நாவல் எழுதினார்.

ஒரு போர் வீரனைப் பற்றிய இந்த நாவலில் சதாம் ஹுசைன் தனது வாழ்க்கை குறித்தும் அமெரிக்கபடைகள் ஈராக்கில் தங்கியிருப்பதைக் கண்டித்தும் எழுதியிருக்கிறார்.'

சதாம் எழுதிய இந்த புத்தகத்தை ஜோர்டானிலுள்ள ஒரு பதிப்பகம் வெளியிட முன்வந்தது. இதற்கு ஜோர்டான் அரசு முதலில் அனுமதியும் அளித்தது. இந்த வாரம் அந்தப் புத்தகம் ஜோர்டானில் வெளியிடப்படுவதாக இருந்தது. பத்தாயிரம் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு அவை தயார் நிலையில் இருந்தன.

இந்த நிலையில் இந்தப் புத்தகத்தை வெளியிட ஜோர்டான் அரசு திடீர் தடைவிதித்துள்ளது. ஈராக் அரசுடனும், அமெரிக்க அரசுடனும் ஜோர்டான் அரசு நல்ல உறவு வைத்துள்ளது. சதாம் ஹுசைன் புத்தகத்தை வெளியிட அனுமதி அளிப்பதால் இந்த இரு நாடுகளுடனான உறவு பாதிக்கப்படுமோ என்று ஜோர்டான் அரசு கருதுகிறது.

வேறுசில அரபு நாடுகளும் ஜோர்டான் அரசு இந்தப் புத்தகத்துக்கு அனுமதி கொடுப்பதை விரும்பவில்லை. இந்தப் புத்தகத்தை வெளியிடும் உரிமையை சதாமின் மகள் ரகத்ஜோர்டானில் உள்ள ஒரு பதிப்பகத்துக்கு வழங்கியிருந்தார். ரகத் இப்போது ஜோர்டானில் தங்கியிருக்கிறார்.

## சிறையில் சித்திரவதையை எதிர்த்த கைதியின் உதட்டைதைத்த பொலிசார்

(முல்தான்)

சிறையில் அதிகாரிகளின் கொடுமையை எதிர்த்து சத்தம் போட்ட கைதியின் உதட்டை தைத்த பாகிஸ்தான் பொலிசார் ஏழு பேர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள வெகாரி சிறையில் முகமது ஹுசைன் என்ற கைதி அடைக்கப்பட்டிருந்தார். சிறை அதிகாரிகளின் கொடுமையை எதிர்த்து இவர் ஆபாசமாக திட்டியதாகக் கூறப்படுகிறது. இதனால், கோபமடைந்த சிறைஅதிகாரிகள் சணல் கயிறை எடுத்து அவரது உதட்டைத் தைத்து விட்டனர்.

இந்தச் சம்பவத்தை பாகிஸ்தானிய ஆங்கில பத்திரிகை செய்தியாக வெளியிட்டுள்ளது. இது குறித்து டி.ஐ.ஜி., மாலிக் முகமது இக்பால் குறிப்பிடுகையில், "கைதியின் உதட்டைத் தைத்ததாகக் கூறப்படும் ஏழு பொலிசார் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். பொலிசார் இந்தச் செயலை செய்தார்களா? அல்லது கைதியே தன் உதட்டை தைத்துக் கொண்டாரா? என்பது குறித்து விசாரணைநடந்து வருகிறது"என்றார்.

முல்தான்நகர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள கைதி " முகமது ஹுசைனுக்கு சிகிச்சையளித்து வரும் டாக்டர் அப்துல் வாஹித் குறிப்பிடுகையில், "முகமது ஹுசைனுக்கு கை மற்றும் முதுகில் பலத்த காயங்களுமுள்ளன. சணல் கயிறால் முரட்டுத்தனமாக தையல் போட்டுள்ளதால், உதடு வீங்கியுள்ளது. தற்போது தையல் நீக்கப்பட்டு விட்டது. முகமது ஹுசைனைப் பொலிசார் பலமாகத் தாக்கியுள்ளமை உறுதியாகியுள்ளது. பொலிசாரின் கொடுமையை பொறுக்க முடியாமல் முகமது ஹுசைன் தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதற்காக அவர் சிறைக்கம்பியில் தலையை மோதிக் கொண்டுள்ளார். அதனால், அவர் தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது" என்றார்.



*நேற்று பாக்தாத் வீதியொன்றில் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத்தாக்குதலில் சின்னாபின்னமாகிய வாகனங்களின் சிதறல்கள்,இரத்த வெள்ளம் என்பனவற்றைக்கடந்து செல்லும் ஈராக்கியப்படையினர்.*



*ஈராக்கின் மொசுல் நகரிலுள்ள போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பொலிசார் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் அவ்விடத்திற்கு வருகைதந்த மீட்புப்பணியாளர்களும், வைத்தியர்களும் (சம்பவத்தில் ஐந்து பொலிசார் பலியாகியதுடன் வேறும் 12பேர் காயமடைந்தனர் கொலையாளி இடுப்புப்பட்டியில் வெடிபொருளை கொண்டு சென்றமை குறிப்பிடத்தக்கது.)*

## சீனாவிடம் மன்னிப்பு கோரியது ஜப்பான்

இரண்டாம் உலகப் போரின்பின்னர் ஜப்பானிய இராணுவத்தினரால் சீனாவில் கைவிடப்பட்டிருந்த இரசாயன ஆயுதத்திலிருந்து வெளியேறிய வாயுக்கசிவு காரணமாக மூன்று சீனமக்கள் பாதிக்கப்பட்டமை குறித்து ஜப்பான் சீனாவிடம் மன்னிப்புக்கோரியுள்ளது.

இந்த அனர்த்தம் தற்செயலாக இடம்பெற்றுள்ளதென்றும் இதனால் காயமடைந்தவர்களையிட்டு தாம் கவலைப்படுவதாகவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஜப்பானிய துருப்பினரால் சீனாவில் விட்டுச்செல்லப்பட்ட இரசாயன ஆயுதங்களை முற்றாக ஒழிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தாங்கள் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

1945 ஆம் ஆண்டு முடிவடைந்த இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஜப்பான் அங்கு விட்டுச்சென்ற சுமார் எட்டுமில்லியன் இரசாயன ஆயுதங்களையும் அப்புறப்படுத்துவதில் ஜப்பான் ஆமைவேகத்தில் செயற்படுவதாகவும் சீனா குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ட்ரகவண்டி வெடித்துச்சிதறியது ஆப்கானில் இரண்டுஜேர்மனியர் பலி

ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் ஆயுதங்கள் நிரப்பப்பட்ட ட்ரக் வண்டியொன்று வெடித்துச்சிதறியதில் இரண்டு ஜேர்மன் படையினரும், ஆறு பொதுமக்களும் உயிரிழந்துள்ளதாக சர்வதேச பாதுகாப்பு உதவிப்படையின் பேச்சாளர் கூறியுள்ளார். மேலும் சம்பவ இடத்தில் நின்ற ஏழு பொதுமக்களும்,பாதுகாப்பு ஏற்பாட்டாளர் ஒருவரும் காயமடைந்துள்ளதாக ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பமைச்சர் கூறியுள்ளார்.

ஆயுதங்கள் நிரப்பப்பட்ட ட்ரக் வண்டிகளில் தொடரணி சென்று கொண்டிருக்கும்போது அவற்றில் ஒன்றில் வெடிவிபத்து ஏற்பட்டதால் குறிப்பிட்ட ட்ரக் வண்டி நிர்மூலமானதாகவும் அவர் கூறினார்.

கடந்த மே மாதம் பங்ளான் பிரதேசத்தின் வடபகுதியில் புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் வெடித்ததில் 28 ஆப்கானிஸ்தானியர்கள் உயிரிழந்ததோடு 70 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மாசுபட்ட நிலைகளில் மீன்பிடிக்க முல்லைத்தீவில் தடை விதிப்பு

## -செயலக சுற்றாடல் பகுதி அறிவிப்பு

(புதுக்குடியிருப்பு)

**முல்லைத்தீவில் வற்று நீர் நிலைகளில் மீன் பிடித்தல் தடை செய்யப் பட்டுள்ளதாக முல்லைத்தீவு செயலக சுற்றாடல் பகுதி அறிவித்துள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியின் தாக்கத்திற்குட்பட்ட கரையோரப் பகுதிகளிலுள்ள ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள், குட்டைகள் போன்ற நீர் நிலைகளினுள் கடல் தண்ணீர் புகுந்து மாசுபடுத்தியது அனைவருக்கும் தெரிந்ததே.

அந்நீர் நிலைகளில் சில தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் வற்றிக் கொண்டிருக்கின்றன.

இதனால், அந்நீர் நிலைகளிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. அதேவேளை, இந் நீர் நிலைகளில் இருந்து பிடிக்கப்படும் மீன்களில் நஞ்சாக்கம் அடைந்துள்ளதோடு, அவற்றை உண்பதால் சொறி, கடி போன்ற பல தொற்று நோய்களும் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது.

இம் மாசுபட்ட, வற்றும் நிலையிலுள்ள நீர் நிலைகளிலிருந்து மீனைப் பிடித்து உணவுக்குப் பயன்படுத்த வேண்டாம். அதேவேளை, அவ்விடங்களிலிருந்து மீனைப் பிடித்து வியாபாரம் செய்யவேண்டாம் என மீன் வியாபாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம். இதையும் மீறி செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம் என சுற்றாடல் பகுதி மேலும் தெரிவித்துள்ளது. (08)

### -முல்லை. மாவட்ட பயனாளிகளுக்கு-


# திருத்தப்பட்ட படகுகள்,இயந்திரங்கள் ஒரு தொகுதி கையளிக்கப்பட்டன

(முல்லைத்தீவு)

போரூட் நிறுவனத்தினாலும் றைற்றா நிறுவனத்தினாலும் திருத்தப்பட்ட மீன்பிடிப் படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்களின் ஒரு தொகுதியும், படகுகளின் ஒரு தொகுதியும் முல்லை மாவட்ட பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் முல்லை மாவட்டத்தில் பழுதடைந்த கடற்றொழில் உபகரணங்களை இந் நிறுவனங்கள் இரண்டும் இணைந்து திருத்தி அமைத்து வருகின்றன. இவற்றினால் திருத்தப்பட்ட வெளியிணைப்பு இயந்திரங்களினதும், படகுகளினதும் ஒரு தொகுதியே திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் போரூட் மற்றும் றைற்றா நிறுவனப்பிரதிநிதிகள், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் மரியராசா, முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. ரங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர். (20)



வட்டக்கச்சி கறுப்பிக்குளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் நீர்ப்பாசன பொறியியலாளர் கந்தசாமி, கமக்கார அமைப்புத் தலைவரிடம் அதற்கான பத்திரத்தினை கையளிப்பதை படத்தில் காண்க. படம்:- ரூபன்

# சிவிக்சென்ரர் பகுதியில் நியாப் I இன் வேலைத்திட்டங்கள் பூர்த்தியாகி கையளிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சிவிக்சென்ரர் பகுதியில் நியாப் I இன்திட்டங்கள் பூர்த்தியாகிய வீதிகள், பொதுமண்டபம், குளம், பொதுக்கிணறு ஆகியன கையளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளியன்று காலை 9.30 மணிக்கு கிராமத் தலைவர் ஆறுமுகம் தலைமையில் இடம் பெற்றது. மங்கல விளக்கினை கிராம சேவையாளர்களாகிய ரூபசிங்கம், தெய்வவேற்பரமநாதன், ஜோன் ஜெகநாதன், இந்திரன் ஆகியோரும் தேசியக் கொடியினை வட்டக்கச்சி அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் ஆரணியும் ஏற்றி வைத்தனர்.

பொது மண்டபத்தினை நீர்ப்பாசன பொறியியலாளர் கந்தசாமியும் களஞ்சிய அறையினை கரைச்சி பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் திருமதி நித்தியானந்தம் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து கருத்துரைகளை வட்டக்கச்சி ம.வி உபஅதிபர் திருமதி. பொன்னுத்துரை, கிராம சேவையாளர்களாகிய ஜோன் ஜெகநாதன், இந்திரன் ரூபசிங்கமும் கிளி நீர்ப்பாசன பொறியியலாளர் கிராமச்சங்க பொருளாளர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் பெனடிற், கரைச்சிப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் திருமதி நித்தியானந்தம், உள்ளூராட்சி ஆணையாளர் உஷா, வீதி அபிவிருத்தி நிறைவேற்றுப் பொறியியலாளர் சிவயோகன், கிராம அபிவிருத்தி உபதலைவர் சபாரத்தினம் நியாப்திட்ட உத்தியோகத்தர் இராசா சுவேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர் இதன் அடிப்படையில் சிவிக் சென்ரர் பகுதியின் இருவீதிகள் நான்கு கிலோ மீற்றர், பத்துவீட்டுத் திட்ட கறுப்பிக்குளம் என்பன கிராம மக்களிடம் கையளிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து கிராமச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளையின் நன்றி உரையுடன் நிறைவுபெற்றது. (12)

# மாந்தை கிழக்கு பாலைப்பாணி கிராமத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும்,வீரமுரசு நிகழ்வும்

(மல்லாவி)

முல்லை மாவட்ட பாண்டியன் குளம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட பாலைப் பாணி கிராமத்தில் பொது நோக்கு மண்டபத் திறப்பு விழா நிகழ்வும், வீர முரசு கலையரங்கமும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை பி.ப.12.30 மணிக்கு பாலைப்பாணி கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் மா.சத்திய நாதன் தலைமையில் நடைபெற்றது.

பொது நோக்கு மண்டபத்தினை மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகு நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார். முன்னதாக தமிழீழ தேசியக் கொடியை அம்பாள் புரம் கிராம அரசியல்துறைப் பொறுப்பாளர் ம.செந்தூரன் ஏற்றி வைக்க, மங்கல விளக்கினை கிராம சேவையாளர் திருமதி. வ.தவராசா, கொல் விளாங்குளம் கிராம சேவையாளர் திருமதி. சுகுணா ஆகியோர் ஏற்றியதைத் தொடர்ந்து கருத்துரைகளை அம்பாள்புரம் கிராம சேவையாளர், பாலைப்பாணி அ.த.க பாடசாலை அதிபர் பா.பாலேஸ்வரன், மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகு ஆகியோர் வழங்கினர். சிறப்புரையை பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் ம.இன்பபாவலன் ஆகியோர் வழங்கினர்.

மாதாந்த வீரமுரசு கலையரங்க நிகழ்வு இரவு 7.30 மணிக்கு பாண்டியன்குள பிரதேச பொறுப்பாளர் சி.இலக்கியன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பாலைப் பாணி கிராமத்தில் மண்மீட்பு போரில் வீரகாவியமான நான்கு மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலைகளையும் அணிவித்தனர்.

நிகழ்வில் வரவேற்பு நடனத்தை பாலைப்பாணி அ.த.க.பாடசாலை மாணவி றேணுகா நிகழ்த்தினார். கருத்துரைகளை கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் மா.சத்தியநாதன், பாலைப்பாணி அ.த.க பாடசாலை அதிபர் ஆகியோர் வழங்க, சிறப்புரையை தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி வழங்கினார். தொடர்ந்து பாலைப்பாணி அ.த.க பாடசாலை மாணவர்களின் குழு நடனமும், ஒற்றுமையே பலம் எனும் நாடகமும், கவிதை பாட்டுகள் என்பன இடம் பெற்றன. அத்துடன் தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை மாணவர்களின் நாடகம், பாட்டு, கவிதை என்பனவற்றுடன் பாண்டியன்குளம் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் மாலதியின் பாடல்கள் இடம் பெற்றன. அடுத்து வினா விடை போட்டிகள் இடம்பெற்றன. அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவீரர் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வில் முல்லை. மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், கிராம மக்கள், அதிபர், ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (24)

# கரும்புலிகள் நினைவாக துணுக்காய் பிரதேசத்தில் சிரமதானம்

துணுக்காய் பிரதேசத்தில் கரும்புலிகள் நினைவாக சிரமதானப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இச் சிரமதானப்பணி மூலம் துணுக்காய் பகுதியில் தேசிய எழுச்சிப்பேரவையினரும் துணுக்காய் காவல்துறைப் பணிமனையினரும் பிரதான வீதிகளிலுள்ள பற்றைகள், புல்பூண்டுகள் என்பனவற்றை சிரம தானம் மூலம் அகற்றி துப்புரவு செய்தனர். நேற்று முன்தினம் இச்சிரமதானப் பணி இடம்பெற்றது. அத்துடன் மல்லாவி பாரதிநகர் பூபாலினி விளையாட்டு மைதானம் மற்றும் அருகிலுள்ள வீதிகள் என்பன ஊரகதேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பிறேமசந்திரன் தலைமையில் 50இற்கும் மேற்பட்ட மக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர் (24)

### –கால்நடை வளர்ப்போர் சங்கங்களுக்கு

# மிகச் சிறியளவு நன்கொடை அமைச்சினால் வழங்கல்

(மல்லாவி)

அண்மையில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்காக அமைச்சில் இருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக சிறிதளவு நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் பாண்டியன்குளம், துணுக்காய் பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்திற்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றார் கால் நடை வைத்தியர் கிரிஜகலா. (24)

### -த.பு.கழக நிதியுதவியுடன்

# துணுக்காய் பிரதேசத்தில் ஏழு முன்பள்ளிகளுக்கு கட்டுமானப் பொருட்கள் வழங்கல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுகழகத்தின் நிதியுதவியுடன் ஏழு முன்பள்ளிகள் புனரமைப்புக்கான கட்டுமானப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டு இதற்கான புனரமைப்பு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

கல்விளான் முன்பள்ளி, உயிலங்குளம் வளர்தமிழ் முன்பள்ளி, கோட்டை கட்டியகுளம் மாதா கோயில் முன்பள்ளி,பழைய முறிகண்டி கலைக்குமார் முன்பள்ளி, புத்துவெட்டுவான் மங்கை முன்பள்ளி, ஆலங்குளம் அதிரதன் முன்பள்ளி, அம்பலப் பெருமாள் முன்பள்ளி, ஆகியவற்றுக்குப் பாண்டியன்குளம் துணுக்காய் புனர்வாழ்வு கழத்தின் அனுசரணையுடன் சீமெந்துப் பொதிகள் கூரைத்தடுகள் என்பன வழங்கப்பட்டு முன்பள்ளி புனரமைப்பு பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடதக்கது. (24)

# கட்டாக்காலி கால்நடைகளால் முள்ளியவளையில் விபத்துக்கள்

(முள்ளியவளை)

முள்ளியவளைப்பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருவதுடன் வீதி விபத்துக்களும் நடைபெற்று வருகின்றன. மேற்படி பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகள் பெருமளவாக இரவு பகலின்றி பிரதான வீதிகளில் திடீர்திடீர் எனப் பிரவேசிப்பதால் வீதியால் செல்லும் வாகனங்கள் மற்றும் உந்துருளிகள் என்பன விபத்துக்குள்ளாகி வருவதுடன் கால்நடைகள் இரவுவேளையில் வீதிகளில் கூட்டமாகக் கிடப்பதால் அவ்விடம் பட்டிபோன்று காட்சியளிப்பதால் அவ்விடத்தால் செல்வோர் சுகாதார சீர்கேட்டுக்குள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக அண்மையில் முள்ளியவளை, முல்லைத்தீவு பிரதான வீதியில் 3ஆம் கட்டை நந்திக்கடல் மஞ்சள் பாலத்திற்கு அண்மையாக பாரிய விபத்து ஒன்று கால்நடைகளால் ஏற்பட்டுள்ளது இதுதொடர்பாக தெரியவருவதாவது: முல்லைத் தீவில் இருந்து முள்ளியவளை நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த டொல்பின் ரக வாகனம் போது நந்திக்கடல் வெளியில் இருந்து இரண்டு எருமை மாடுகள் பிணைக்கப்பட்ட நிலையில் வேகமாக வீதியை குறுக்கறுத்தபோது மாடுகளுடன் மோதுண்டு வாகனம் பலத்த சேதத்துக்குள்ளானதுடன் பிணைக்கப்பட்ட மாடுகளில் ஒன்று அவ்விடத்திலேயே இறந்து போனமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# சங்காபிஷேகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கணேசபுரம் அருள் மிகு சித்திவிநாயகர் ஆலய சங்காபிஷேக நிகழ்வு எதிர்வரும் மூன்றாம் திகதியன்று நடைபெறவுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினரின் சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் போது எறிகணை மற்றும் விமானக் குண்டு வீச்சுகளினால் சேதமாக்கப் பெற்ற மேற்படி ஆலயம் தற்போது புனரமைப்பு வேலைகள்இடம் பெற்று கடந்த பத்தாம் திகதியன்று கும்பாபிஷேகம் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது. (சோ)

# முன்பள்ளி விளையாட்டு

(முள்ளியவளை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முல்லைவலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைபொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் நடை முறைப்படுத்தப்பட்டுவரும் முள்ளியவளை காட்டுவிநாயகர் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு எதிர்வரும் ஒன்பதாம் திகதி பி.ப 3.00 மணிக்கு காட்டு விநாயகர் ஆலய வீதியில் அமைக் கப்படும் மைதானத்தில் நடைபெற வுள்ளது.

* * * * *

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அனுசரனையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முள்ளியவளை வடக்கு திரேசா முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிவிழா நிகழ்வு இன்று பி.ப 3.00 மணிக்கு மேற்படி முன்பள்ளி சிறுவர் விளையாட்டு முற்றத்தில் முன்பள்ளி ஆசிரியையின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ளது. (ஆ)

# கரும்புலிகள் நாளைஎழுச்சியுடன் அனுஷ்டிக்க யாழ்.குடாநாட்டில் பல்வேறு அமைப்புகளும் ஏற்பாடு

### முக்கிய நிகழ்வு நெல்லியடியில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

**கரும்புலிகள் நாளை யாழ். குடாநாடெங்கிலும் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கரும்புலிகள் நாளின் யாழ். குடாநாட்டுக்கான முக்கிய நிகழ்வு கரும்புலி மில்லர் நினைவாலயத்தில் நடைபெறும்.**

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் எனப் பரவலாக கரும்புலிகள் நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டுக்கான விசேட நிகழ்வு வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வளாகத்துள் இருக்கும் கரும்புலி மில்லரின் நினைவாலயத்தில் இடம்பெறும்.

இதேவேளை கரும்புலிகள் நாளை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமிழீழ மாணவர் அமைப்பு தேசிய எழுச்சிப் பேரவை என்பன மாணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டிகளையும் நடத்தி வருகின்றன.

இதைவிட சிறப்பான சிரமதானம் சமூக சேவைப் பணிகள் என்பனவும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (33)

## சுகாதார வெளிக்களப் பணிகளுக்கு வாகனங்கள் உண்டு; சாரதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுகாதார வெளிக்களப்பணிகளை மேற்கொள்ளு வதற்கு தேவையான வாகனங்கள் உள்ளபோதும் அவற்றுக்கான சாரதிகள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது எனப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர்வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் திருப்திகரமான முறையில் சுகாதார சேவைகளை வழங்குவதற்கு போதியளவு வாகனங்கள் பிரதி மாகாண சுகாதாரப்பணிமனையில் உள்ளன.

எனினும் இவற்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவையானளவு சாரதிகள் இல்லாதிருப்பதால் வெளிக்களச் சுகாதார பணிகள் நெருக்கடிகளுக்குள்ளாகியிருப்பதெனச் சுட்டிகாட்டியுள்ள வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் குறிப்பாக சுமார் 14 சாரதிகள் வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிலவி வருகின்றமையையும் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

## கோப்பாய் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் பெரும் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மேற்படி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி மற்றும் ஆங்கிலக் கல்வி மற்றும் அழகியல் கல்வி போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இதனால் இப் பிரதேசப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் பெரும் பின்னடைவுளைச் சந்தித்து வருகின்றனர். இது அவர்களின் கல்வி எதிர் காலத்தைப் பெரிதும் பாதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். கல்வி வலயத்தில் இருக்கின்ற தேசியப் பாடசாலைகளில் மேலதிக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதும் அங்குள்ள மேலதிக ஆசிரியர்களைப் பயன்படுத்தி இந்த வெற்றிடங்களை நிரப்புவதில் பல சிக்கல்கள் காணப்படுவதாகவும், யாழ். வலய கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் கூறியுள்ளார்.(33)

## யாழ்.சிறைச்சாலை வசதியீனங்கள்; அடிப்படை உரிமை மீறப்படுகின்றது

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் நிலவுகின்ற வசதியீனங்களினால் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

இது விடயம் சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி ஹோகித பிரியதர்சன இலங்கை சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூமிமர்ஜூத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளார்.

யாழ். சிறைச்சாலையில் நிலவும் இட வசதிகள் இன்மை காரணமாக ஒவ்வோர் சிறிய சிறைக் கூண்டுகளுக்குள்ளும் ஏராளமான கைதிகள் அடைத்து வைக்கப்படுகின்றனர்.

இதைவிட இங்குள்ள தொடர்பாடல் பிரச்சினைகள், சுகாதாரப் பிரச்சினைகள் என்பன வற்றாலும், கைதிகளுக்குள்ள அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவதாகவும், சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் இந்த நெருக்கடி நிலைமைகளைத் தீர்க்க சிறைச்சாலை ஆணையாளர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (33)

## 30 ஆயிரம் மரங்களை நடுகை செய்ய பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 30 ஆயிரம் மரக் கன்றுகளை நடுகை செய்யும் திட்டம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

யாழ். குடாநாட்டில் இடம் பெற்றுள்ள இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக யாழ். குடாநாட்டில் பெருந்தொகையான பயன் தரும் மரங்கள் அழிக்கப் பட்டுள்ளன.

இந்த வள அழிவுகளில் இருந்து யாழ். குடாநாட்டினை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடனேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இவ் வருட இறுதிக்குள் 30ஆயிரம் பயன் தரும் மரக்கன்றுகளை நடுகை செய்யத் திட்டமிட்டிருக்கின்றது.

இதன் மூலம் யாழ். குடாநாட்டில் வன வளம் கட்டியெழுப்பப்பட்டு சூழல் சமநிலை சிறந்த முறையில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

## மந்திகை மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

### பிரதி புதன்கிழமை தோறும் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மந்திகை வைத்தியசாலையில் நாளை தொடக்கம் கண் சிகிச்சைப் பிரிவு ஒன்றை புதிதாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட விருக்கும் கண் சிகிச்சைப் பிரிவு பிரதி புதன் கிழமைகள் தோறும் இயங்கும் என பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மந்திகை வைத்தியசாலையில் கண் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கென தனியான ஓர் பிரிவு இயங்காததினால் வடமராட்சி பிரதேசங்களைச் சேர்ந்த கண் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலை வரை வந்து சிகிச்சை பெற்றுச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் படும் சிரமங்களை போக்குவதற்காகவே பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். (33)

## கனடாவில் தமிழ்மொழி வார நிகழ்வுகள் கடந்த சனியன்று எழுச்சியுடன் ஆரம்பம்

கனடாவில் கடந்த சனியன்று தமிழ்மொழி வார நிகழ்வுகள் சிறப்புற ஆரம்பமாகியுள்ளன. ரொரன்ரோ அஸ்ரன் பீ வளாகத்தில் அமைந்துள்ள கலையரங்கில் மாலை 5.30 மணியளவில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. மங்கல விளக்கினை ஈழத்துப் பூரணரும் கனேடிய தமிழ் வானொலி அதிபர் கலாதரனும் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தேசியக் கொடி ஏற்றல் அகவணக்கம் இடம் பெற்றன.

இதில் வரவேற்புரையினை படைப்பாளிகள் கழகத்தலைவர் நக்கீரன் நிகழ்த்தினார். ஆரம்ப உரையினை தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி அதிபர். சு. இராசரத்தினமும் உறுதியுரையினை சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசனும் நிகழ்த்தினார்கள்.

இதைத் தொடர்ந்து சிறப்புரையினை கனேடிய தமிழ் வானொலி அதிபர் கலாதரன், உலகத் தமிழர் பத்திரிகை பொறுப்பாளர் கமல் 24 மணி நேரத் தமிழ் தொலைக்காட்சி பல் கலாச்சார வானொலி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் பி. விக்கினேஸ்வரன், தமிழர் தகவல் ராஜ்குமார், ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் பரமேஸ்வரன், ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த வைகறை நேசன் பொன்னுத்துரை தேசியம் பத்திரிகை ஆசிரியர் இலங்கதாஸ் பத்மநாதன் ஆகியோர் தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி உரை நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து ஆழிப் பேரலை நினைவுகள் என்ற தலைப்பிலான உரையும், தமிழ் மொழியைப் பற்றிய உரையாடலுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.







தகவல், படங்கள்:- எழிலன்

# சோதிட பலன் ஜெயலலிதாவுக்கு சாதகம் இவ்வாண்டு இறுதிக்குள் தமிழகத் தேர்தல்

தமிழக சட்ட சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் எனும் வினாவுக்கு அண்மையில் விடை கிடைத்திருக்கின்றது. 2006 இல் நடைபெற வேண்டிய சட்ட சபைத் தேர்தல் 2005இன் இறுதிக்குள் நடைபெறவுள்ளதாக ஆளும் கட்சி தகவல் வெளியிட்டிருக்கின்றது.

அதாவது வாஸ்து மாயையின் பிடிக்குள் இருக்கும் தமிழக முதலமைச்சர் அதன் பிரகாரமே 2006இல் தேர்தலை நடத்தினால்


கருணாநிதி

தான் மண் கௌவ நேரிடும் எனும் (அவ) நம்பிக்கை காரணமாக இவ்வாண்டு இறுதியில் தேர்தலை நடத்துவதென்று முடிவு செய்திருக்கின்றார்.

ஏனெனில் இவ்வாண்டு தமிழக முதலமைச்சருக்கு வாஸ்துவின் பலன் மிகவும் அனுகூலமானது என்பது அவருக்கு அடிக்கப்பட்ட வேப்பிலையே என்று தான் கூற வேண்டியுள்ளது.

எனவே வெகுவிரைவில் மீண்டும் தமிழகம் பிரச்சாரப் பீரங்கிகளால் அதிரப் போகின்றது என்பது என்னமோ உண்மைதான்! அண்மையில் தான் கும்டிபூண்டி, காஞ்சிபுரம் இடைத்தேர்தல் முடிந்திருக்கின்றது. அதன் சூடு தணிவதற்குள் மீண்டும் அடுத்த தேர்தல்


இளவரசி

கனல் வீசவுள்ளது.

இதனிடையே கும்டிபூண்டி, காஞ்சிபுரம் இடைத்தேர்தலில் வாக்காளர் மோசடி என்பது பெரும் பூதாகாரமான பிரச்சினையாக மாறி வருகின்றது. இதன் எதிரொலிகள் தமிழகம் எங்கும் வியாபிக்க தவறவில்லை.

அதன் பலாபலன் வெகு விரைவில் தமிழக தேர்தல் ஆணையகம் தமிழக அரசிடம் விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக அதிரடியாக தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலை எங்கு போய் நிற்கப் போகின்றது என்பது பெரும் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் விடையாகவுள்ளது.

இந்த நிலையில் தமிழக சட்டசபை கலைப்பும் தேர்தலும் எவ்வளவு தூரம் தமிழக அரசிற்கு கைகொடுத்து உதவப் போகின்றது என்பதும் புரியாத புதிர்தான்!

ஏற்கனவே கடந்த மே மாதம் சட்ட சபைத் தேர்தலை தவிர்க்க முடியும் என்று இவ்வாண்டின் ஆரம்பத்தில் பேசப்பட்டது. இதற்கு கர்நாடக மாநிலத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு ஆரம்பமாக இருந்தமையே பிரதான வலுவான காரணமாக இருந்தது.

ஆனால் ஏனோ சட்ட சபைக் கலைப்பும், தேர்தலும் அப்படியே மௌனியாக்கப்பட்டு விட்டது. இதற்கும் வாஸ்துவே காரணம் என்று கருதப்பட்டதும் நம்பப்பட்டதும் இல்லாமலில்லை.

இந்த நிலையில் மீண்டும் அதே பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதுவும் புஸ்வாணம் ஆகுமா... அல்லது தமிழகம் தேர்தல் களை கட்டுமா என்பதும் வினாக்கள் தான்!

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கும் கர்நாடகாவில் ஆரம்பமாகியுள்ள சொத்துக் குவிப்பு வழக்கிற்குமே முடிச்சு போடப்படுகின்றது சட்ட சபைத் தேர்தலும் சொத்துக் குவிப்பு வழக்கும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதாகவும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் தான் "நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டு" என்பதாய் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பெங்களூர் நீதிமன்றிற்கு ஏதாவது சாக்குப் போக்கு காட்டி போகாமல் இழுத்தடித்து வருகின்றார். ஆனால் தனது வழக்கறிஞர் ஜோதியை மட்டும் தவறாமல் அனுப்பித் தனது தரப்பு காரணங்களை சமர்ப்பித்து நீதிமன்றத்தை கவனக்கலைப் பிற்குள் தள்ளி வருவதென்னமோ உண்மை தான்!

இதுவரை பத்து முறைக்கும் மேலாக பெங்களூர் நீதிமன்றில் ஆஜராகாமல் தமிழக முதலமைச்சர் நழுவி இருக்கிறார். இவருடன் இவரது தோழி சசிகலா, இளவரசி டி.டி தினகரன் போன்றோரும் சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தான்! ஆனால் இவர்களும் இதுவரை பெங்களூர் நீதிமன்ற வாசலை எட்டிக்கூடப் பார்த்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தமிழக முதலமைச்சரின் வளர்ப்பு மகனான சுதாகர் மட்டும் கடந்த 14 ஆம் திகதி விசாரணைக்காக பெங்களூர் நீதிமன்றில் ஆஜராகி இருந்தார் என்பது கவனிக்கத் தக்கதொன்று.

ஏனையவர்கள் ஆஜராகாத நிலையில் சுதாகர் மீதும் விசாரணை நடைபெறவில்லை. ஆக... திட்டமிட்டே தான் குற்றஞ் சுமத்தப் பட்டவர்களில் ஒருவர் மட்டும் ஆஜராகுவதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.

1991-1996 வரை தமிழக முதலமைச்சர் கதிரையை அலங்கரித்த ஜெயலலிதா தனது தோழி சசிகலா, இளவரசி டி.டி தினகரன், வளர்ப்பு மகன் சுதாகர் என்பவர்களையும் பணத்தால் கோடிகோடியாக கொட்டி அலங்கரித்துள்ளதாகவே குற்றச்சாட்டு.


இதன் மறு வடிவமே ரூ. 66 கோடி பெறுமதியான சொத்துக்களை இவர்கள் பெயரில் வாங்கிச் சேர்த்துள்ளமையான சொத்துக் குவிப்பு வழக்காகும். இந்த வழக்கு கடந்த காலத்தில் எப்படி தொடரப்பட்டதோ அதே நிலையில் தான் முன்னேற்றமின்றி இருந்தது. இந்த வழக்கை சுப்பிரமணிய சுவாமியே தாக்கல் செய்த போதும் தி.மு.க பொதுச் செயலர் அன்பழகனே வேறு மாநிலத்திற்கு இந்த வழக்கு மாற்றப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் போர்க் கொடி தூக்கியவர் ஆவார்.

ஏனெனில் 1996 இன் பின்னர் இந்த சொத்துக் குவிப்பு வழக்கு நிலுவையில் இருந்ததே தவிர விசாரணைகளோ ஆஜராகுவதோ எதுவுமே நடக்கவில்லை. காரணம் தமிழகத்தின் முதலமைச்சராக ஜெயலலிதாவே இருந்தமை தான். தன்னுடைய வழக்கை யாராவது வலிந்து நடத்துவது இல்லைத்தானே!

சொத்துக் குவிப்பு வழக்கில் பல விசித்திரங்கள் திடீர் திடீரென அரங்கேறின. வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள் மாற்றப்பட்டனர் அரச வழக்கறிஞர்களும் தூக்கப்பட்டார்கள். இதனால் புதிது புதிதாகச் சொத்துக்குவிப்பு வழக்கினைத் தொடர்ந்த நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் விட்ட இடத்திலிருந்து தொடர முடியாமல் திணறினர். மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டிய அவலத்திற்குத் த[illegible]ப்பட்டனர்.

[illegible]துடன் முடிந்ததா... என்றால்.. மீண்டும் இவர்களும் மாற்றப்பட்டனர் புதியவர்கள் வந்தார்கள் மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணை மாற்றம் சுழற்சி முறையாக இதுவே நடந்தது.

இதனால் தான் தி.மு.க அன்பழகன் வேறு மாநிலத்திற்கு வழக்கை மாற்றுமாறு கோரினார். இவரது கோரிக்கையினை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டமை தமிழக முதலமைச்சருக்கும்


சுதாகர்

பெரும் இடியாக இறங்கியதும் உண்மை தான்!

2003 டிசம்பர் 18ஆம்திகதி உச்ச நீதிமன்றம் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை கர்நாடக மாநிலம் பெங்களூர் தனி நீதிமன்றத்திற்கு மாற்றியது. சொத்துக் குவிப்பு தொடர்பான சகல ஆவணங்களும் கர்நாடகாவிற்கு பறந்தன. கடந்த சனவரியில் சொத்துக் குவிப்பு வழக்கு ஆரம்பமானது.

ஆனால் இதுவரை பூரணமாக விசாரணை நடந்துள்ளதா என்றால் அதுவும் பூஜ்யம் தான் சட்ட சபையில் கலந்து கொள்ளல், கும்டி பூண்டி காஞ்சிபுரம் இடைத்தேர்தல்..எனப் பல வித சாக்குப் போக்குகளை காட்டி தமிழக முதலமைச்சர் பெங்களூர் சென்று வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுத்ததில்லை.

அதுமட்டுமன்றி சொத்துக் குவிப்பு வழக்குடன் லண்டனில் ஹோட்டல் வாங்கிய வழக்கையும் சேர்த்து நடத்த வேண்டுமென்று தமிழக முதலமைச்சரின் வழக்கறிஞர் ஜோதி நீதிமன்றத்தை திசை திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டு இல்லாமலில்லை

ஆனால் அரசு வழக்கறிஞர் ஆச்சார்யா விடாப்பிடியாக இரண்டு வழக்கையும் தனித் தனியாக நடத்த வேண்டுமன்று உடும்பாய் நின்றதையடுத்து உச்ச நீதிமன்றம் கடந்த 22 ஆம் திகதி இரண்டு வழக்கும் தனித் தனியாகவே நடத்த வேண்டும் என்று உத்தர விட்டு தமிழக முதலமைச்சரை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

அது மட்டுமன்றி இந்த வழக்கை விசாரணை செய்யும் பச்சாபுரே இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கையில் திருப்தி இல்லை என்றும் இனி அவகாசம் கொடுக்க முடியாது குற்றம் சாட்டப்பட்டவர் இனி ஆஜராகாது விட்டால் பின் விளைவுகள் மோசமாக இருக்குமென்ற கண்டித்திருக்கின்றார்.


ஜெயலலிதா - சசிகலா

இதனால்தான் சட்டசபைத் தேர்தலை சந்தித்த பின்னர் பெங்களூர் வழக்கை சந்திக்க தமிழக முதலமைச்சர் முடிவெடுத்திருப்பதாக தகவல்கள் வெளிப்படுகின்றன. ஏனெனில் மீண்டும் தமிழக முதலமைச்சராகி விட்டால்.. வழக்கை இழுத்தடித்தே நாறடிக்கலாம் என்பதே அவருக்கு கூறப்பட்ட ஆலோசனை என்று தகவல் கசிகின்றது.

இதனால் தான் இவ்வாண்டின் இறுதிக்குள் தேர்தல் நடத்தப்பட ஏற்பாடாகின்றது என்றும் கூறப்படுகின்றது.

இது மட்டுமன்றி வருமான வரி மோசடி வழக்கும் தமிழக முதலமைச்சரை பயமுறுத்துவதாக எழுந்திருக்கின்றது. 1998 -1999 வரை வருமான வரி கட்டாமல் தமிழக முதலமைச்சர் மோசடி செய்ததாக சென்னை நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது.

இந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் அவசர அவசரமாக தமிழக முதலமைச்சர் வருமானவரி கணக்கை சமர்ப்பித்தபோதும் அதனை ஏற்க முடியாது என்று சென்னை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.


ஆக.. வருமான வரி மோசடி வழக்கும் இசகு பிசகாகவே தான் தமிழக முதலமைச்சருக்கு இருப்பதாக காண முடிகின்றது.

இந்நிலையில் சலுகைகளை அள்ளி வழங்கினும் சட்டமன்ற தேர்தலில் நிச்சயம் அ.தி.மு.க படு தோல்வியே தழுவும் எனவும் எதிர்க்கட்சியினர் கங்கணம் கட்டுகின்றனர்.

இதே வேளை கும்டிபூண்டி காஞ்சிபுரம் இடைத்தேர்தல் வெற்றி சட்டசபை தேர்தலிலும் பிரதிபலிக்கும் என்று நம்பத்தோன்றும் அதே வேளை வாக்காளர் மோசடி அந்த நம்பிக்கையினை சிதறடிக்கத் தவறவில்லை.

எது எப்படி என்றாலும், இவ்வருட இறுதிக்குள் சட்டசபைத் தேர்தலை தமிழகம் சந்திக்குமா? அப்படியே தேர்தல் நடந்தாலும்...? பெங்களூரில் சொத்துக் குவிப்பு வழக்கும் வாக்காளர் மோசடியும் இதில் செல்வாக்கு செலுத்துமா... என்பதே இன்றைய தமிழகம் ஆளும் கட்சி எதிரேயுள்ள சவால்களாகும் என்றால் மிகையில்லை.

அ.கலைவாணி



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# வங்கத்தின் நாயகன்



"**முகமது அஷ்ரபுல்** வங்க தேசத்தின் எழுச்சி நாயகன். உலக சம்பியனை வீழ்த்தி வரலாறு படைத்த கதாநாயகன்" என ரசிகர்கள் புகழ்கின்றனர்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சதம் அடித்து அணிக்கு மகத்தான வெற்றியைத் தேடிக்கொடுத்ததுடன் அடுத்து இங்கிலாந்துக்கு எதிராக 52 பந்தில் 94 ஓட்டம், அடுத்து அவுஸ். அணிக்கு எதிராக 54 ஓட்டம் என விளாசி பரவசப்படுத்தினார்.

தனது இந்த திடீர் எழுச்சி பற்றி அவர் தெரிவிக்கையில்;

இங்கிலாந்துக்கு முதன் முறையாக சென்ற எங்களுக்கு உலகின் தலைசிறந்த இரு அணிகளுக்கு எதிராக விளையாடும் தங்கமான வாய்ப்புக் கிடைத்தது. இதை வீணாக்கலாமா? இங்கிலாந்தில் அஷ்ரபுல் சிறப்பாக செயற்பட வேண்டியதன் அவசியத்தை பயிற்சியாளர் வட்மோர் அடிக்கடி சொன்னார். நன்றாக செயற்பட்டால் கவுண்டி போட்டிகளில் கூட விளையாட வாய்ப்புக் கிடைக்கும். இந்த விடயங்களை மனதில் வைத்து கடும் பயிற்சிகளில் ஈடுபட்டேன். தற்போது எல்லாமே சாதகமாக நடக்கின்றது.

இது சிறந்த அணிக்கு எதிராக சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையை தந்துள்ளது. டெஸ்டில் மோசமாகச் செயற்பட்டதால் ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தோம். இந்த நிலையில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது தென்பாகவுள்ளது.

இதற்கும் மேலாக பயிற்சியாளர் களத்தில் நீண்ட நேரம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். களத்தில் நீடித்து இருங்கள் ஓட்டங்கள் தானாக வரும் என்று வட்மோர் அடிக்கடி கூறுவார். இதுவே எங்களது வியூகமாகவும் இருந்தது.

60 பந்தில் 70 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு மாறியபோது கைவசம் ஏழு விக்கெட்டுக்கள் இருந்தன. அப்போது தான் உலக சம்பியனை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. அதிகம் பதற்றப்படாமல் சாதிக்க வேண்டும் என்று உறுதி கொண்டோம். வெற்றி கைவசமானது.

இதேவேளை 50 ஆவது போட்டியில் விளையாடப்போகிறேன். ஒரு நாள் போட்டியில் சாதிக்கவில்லையே என்று என்னை நானே நொந்து கொண்டு தான் களமிறங்கினேன். கடைசியில் சதமடித்தேன். அதுவும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக, மகிழ்ச்சியின் உச்சிக்கு சென்றேன். உண்மையைச் சொன்னால் அந்தத் தருணத்தில் நான் வேறு உலகத்தில் தான் இருந்தேன் என்று பெருமிதமடைகின்றார் அஷ்ரபுல்.

இந்த நிலையில் பங்களாதேஷின் டெஸ்ட் அந்தஸ்து ரத்துச்செய்யப்பட வேண்டும் என்ற விமர்சனம் பற்றி கூறிய அஷ்ரபுல். இது கடுமையானது. எங்கள் அணி இளமையானது. அவுஸ்திரேலிய அணியை எடுத்துக்கொண்டால் வீரர்கள் சராசரி 33 வயதில் உள்ளனர். எங்களது வீரர்களின் வயது சராசரி வெறும் 22. எனவே



சாதிக்க கொஞ்சக் காலம் தேவைப்படும். கடந்த ஆறு மாதங்களில் நல்லமுன்னேற்றம் கண்டுள்ளோம். இதே வேகத்தில் செயற்பட்டால் இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் பங்களாதேஷ் உலகின் சிறந்த அணிகளில் ஒன்றாக உருவெடுக்கும் என்றார்.

# உன்னை வெல்வது யார்?


**உலக** தடகளத்தை பொறுத்த வரையில் 100 மீற்றர் பிரிவுக்கு தான் மதிப்பு அதிகம். இதில் அதிவேகமாக ஓடி சாதிப்பவரே உலகின் மின்னல் வேக வீரர் என்றழைக்கப்படுகின்றார். சமீபத்தில் இந்தப் பெருமையைப் பெற்றவர் ஜமேக்காவின் 22 வயதான அசாபா பவல்.

முன்னணி தடகள வீரரான இவர் 2004 எதென்ஸ் ஒலிம்பிக்கில் ஐந்தாம் இடம் பெற்று ஏமாற்றமடைந்தார். இதன் பின் கடுமையான பயிற்சி மேற்கொண்ட இவருக்கு இந்த ஆண்டு மிகவும் உச்சம்.

செக் குடியரசில் நடந்த சர்வதேச தடகள போட்டியில் 9.85 வினாடி அதன் பின் ஜமேக்கா போட்டியில் 9.84 வினாடிகளில் 100 மீற்றரைக் கடந்த பவல் இந்த ஆண்டில் மிக விரைவாக ஓடிய பெருமையைப் பெற்றதுடன் எதென்ஸ் சர்வதேச போட்டியில் புதிய உலக சாதனையை நிகழ்த்தினார். போட்டித் தூரத்தை வெறும் 9.77 வினாடிகளில் கடந்து அமெரிக்காவின் டிம் மொன்ட் கோமெரி (9.78) யின் முந்தைய சாதனையை முறியடித்தார்.

இதனை விட அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தி வரும் உலக சாதனையாளர்கள் பட்டியலில் பிற நாட்டைச் சேர்ந்த வீரராக இடம் பிடித்து பவல் அசத்தினார்.

1912 இல் அமெரிக்காவின் டொனால்ட் லிப்பின் காட் 10.6 வினாடிகளில் கடந்த முதல் முறையாக சாதனை நிகழ்த்தினார். அதன் பின்னர் அமெரிக்கா அல்லாத பிறநாட்டவர் என்று பார்த்தால் பெர்சிவில்லியம்ஸ் (1930 கனடா)



அர்மின் ஹாரி (1960 மேற்கு ஜேர்மனி) டோனோவின் பெய்லி (1996 கனடா) இந்த மூவரால் மாத்திரமே உலக சாதனை படைக்க முடிந்தது.

தற்போது நான்காவது வீரராக பவல் சாதித்துக் காட்டியுள்ளார். வெற்றி குறித்து அவர் கூறுகையில், தடகளத்தில் எனது விருப்பத்துக்குரியவர் அமெரிக்காவின் மொரிஸ்கிறீன்தான். அவரைப் போலவே நானும் உலக சாதனை நிகழ்த்த வேண்டும் என்று நினைத்தேன். எனது இலட்சியம் இப்போது நிறைவேறியுள்ளது. இந்த வெற்றிக்கு எனது அப்பாவும் சகோதரனும் தான் காரணம். இந்த வெற்றியை எனது அப்பாவுக்கு அர்ப்பணிக்கிறேன்.


இவரது இந்த சாதனை ஜஸ்டின் ஹாட்லின், மொரிஸ் கிறீன் போன்ற அமெரிக்க நட்சத்திர வீரர்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில் இனிவரும் 100 மீற்றர் ஓட்டக்களம் சூடு பிடிக்கும் என நம்பலாம்.

# யார்தான் முன்வருவார்கள்?

**சர்வதேச** போட்டிகளில் ஒரு அணி அல்லது வீரர் திறமையாக செயற்படுகின்றார் என்றால் அதற்கு அடித்தளமாக அமைவது உள்ளூர்ப் போட்டிகளும் நிறைந்த பயிற்சியுமாகும்.

இந்த வகையில் சர்வதேச நாடுகள் பல முன்னணி கழகங்களை உருவாக்கி ஆண்டு தோறும் பல்வேறு போட்டித் தொடர்களை நடாத்தி சிறந்த வீரர்களைத் தெரிவு செய்கின்றது. இந்த வகையில் ஒவ்வொரு நாட்டிலும் விளையாட்டுக் கழகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இதில் ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகளின் கழகங்களே பிரபல்யம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. ஏனெனில், அந்நாடுகளின் கழகங்கள் உலகின் அதிசிறந்த வீரர்களைப் பெருந்தொகைப் பணம் கொடுத்து வாடகைக்கு அமர்த்தி விடுகின்றன. இது போட்டிகளை ரசிப்பவர்களுக்கு அரிய விருந்தாக அமைவதுடன் அவர்களையும் மேலும் பிரபல்யப்படுத்துகின்றது. இது ஒருவகை கழகங்களுக்கிடையிலான போட்டி.




தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையில் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் இலைமறைகாயாக இருக்கின்ற வீரர்களை வெளிக் கொணர்வதற்கு பிரதான ஊடகமாகத் திகழ்கின்றது.

அந்த வகையில் கழகங்களுக்கிடையிலான சுற்றுப் போட்டிகள்



நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் இளைய சமூகத்தினரிடையே போட்டித் தன்மையை அதிகரித்துள்ளது.

குறிப்பாக, கடந்த வாரம் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டி சிறப்பாக அமைந்திருந்தது.

பொதுவாக கால்பந்துக்கே முக்கியத்துவம் கொடுத்து போட்டிகளை நடாத்தும் கழகங்களில் வித்தியாசமாக கிரிக்கெட், வலைப்பந்து, கால்பந்து போட்டிகளை நடாத்தி ஊக்குவித்தது ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இது ஏனைய கழகங்களுக்கும் முன்மாதிரியாக அமைந்தது.

எனவே, இது மேற்படி துறைசார்ந்த போட்டிகளில் ஆர்வம் உள்ள இளைய சமூகத்துக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இனிவரும் காலங்களில் ஏனைய கழகங்களும் மேற்படி போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற தேவையை உணர்த்தியுள்ளது.

குறிப்பாக, கால்பந்து போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வழமையான கழகங்கள் கலந்து கொண்டபோதும் அவற்றில் புதிய வேகமோ புதிய நுட்பங்களோ பிரயோகிக்கப்பட்டனவா என்றால் இது பூஜ்ஜியம்தான். ஆனால், வன்னியில் முன்னணி அணிகளில் ஒன்றாகத் திகழ்ந்த உதயதாரகை அணி மாத்திரம் சிறிது கால வீழ்ச்சிக்கு பின் மேற்படி போட்டித் தொடரில் திடீர் வளர்ச்சிப் போக்கை காண்பித்ததை காணக் கூடியதாக இருந்தது. இது அனைவரையும் கவர்ந்தது. இதில் சந்திரோதயா அணி இறுதிப் போட்டியில் அருமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி உழவர் ஒன்றிய அணியை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

மென்பந்து கிரிக்கெட் போட்டியில் தர்மபுரம் இளந்தாரகை அணி கிளிநொச்சி நியூஸ்ரார் அணியைத் தோற்கடித்து தனது திறமையை வெளிப்படுத்தியது. இது போட்டிக்கு போட்டி சவால் நிறைந்ததாக அமைந்தது. கிரிக்கெட்டும் வன்னியில் நல்ல நிலையை எட்டும் என்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்தியது. வலைப்பந்து இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி உருத்திரபுரம் அணியைத் தோற்கடித்து. விளையாட்டில் பயிற்சியின் தாற்பரியம் என்ன என்பதை வெளிப்படுத்தியது.

எனவே, நாமும் விளையாட்டில் உச்ச பயன் பெறவேண்டுமானால், உள்ளூர்ப் போட்டிகள் முக்கியமானது. இதனை உணர்ந்து தொடர்ந்தும் போட்டிகளை நடாத்த முன்வருபவர்கள்தான் யார்?

# கட்சியின் அடுத்த தலைமைத்துவம் வெகுவிரைவில் தீர்மானிக்கப்படும்

## - அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

தமது கட்சியின் அடுத்த தலைமைத்துவம் தொடர்பான தீர்மானம் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும் என, துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் தாமும் ஒருவர் என இங்கு குறிப்பிட்டிருக்கும் அமைச்சர் மங்கள சமரவீர, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அநுரா பண்டாரநாயக்க, சனாதிபதி சந்திரிகா ஆகியோருடன் தாமும் இணைந்து ஒன்றாகக் கைகோர்த்து, அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்குப் போராடவுள்ளதாகவும் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்தின, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த வேட்பாளர் யார் என்பது தொடர்பில் எவரும் கேள்வி யெழுப்பத் தேவையில்லையெனக் கூறியுள்ளார்.

இதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு, தாமும் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்களும் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுவுடன் கலந்துரையாடியே கட்சியின் அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார்? என்பது தொடர்பிலும், அடுத்த அதிகாரத்துக்குரியவர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அமைச்சர் டி.எம். ஜயரத்தின மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கான சிறிலங்கா தூதுவர் மிக விரைவில் மாற்றம்

(கொழும்பு)

இந்தியாவுக்கான சிறிலங்கா தூதுவர் மங்கள முனசிங்க விரைவில் நீக்கப்படவுள்ளார் அவருக்குப் பதில் ரொமேஸ் ஜயசிங்க நியமிக்கப்படவுள்ளார்.

பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்காக சிறிலங்கா தூதுவராக ஜயசிங்க கடமையாற்றி வருகிறார். புதுடில்லியிலும் பிரதித் தூதுவராகப் பணியாற்றியுள்ளார்.

மங்கள முனசிங்கவுக்கும் சுற்றுலா மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவுக்கும் இடையே பல முறை முறுகல் நிலை ஏற்பட்டது.

அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற சிறிலங்கா அரசினது வெளிநாட்டு முதலீட்டைப் பெறுவதற்கான நிலையத் திறப்பு விழாவில் மங்கள முனசிங்க பங்கேற்காதது குறித்து தமது கடும் அதிருப்தியை அநுரா பண்டாரநாயக்க ஊடகங்களில் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் மங்கள முனசிங்கவை நீக்கம் செய்யத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றி மறைந்த பேர்னார்ட் திலகரத்னவுக்கு அடுத்ததாக மங்கள முனசிங்க நீண்ட காலம் இப் பணியாற்றியவர்.


முன்னைய மக்கள் கூட்டணி ஐக்கிய தேசிய முன்னணி அரசுகளின் போதும் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசிலும் இந்தியாவுக்கான சிறிலங்கா தூதுவராக அவர் பணியாற்றியுள்ளார்.

புதிய தூதுவர் தொடர்பான இந்திய அங்கீகாரத்திற்காக கொழும்பு காத்திருப்பதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நினைவலைகள்...

**04ஆம் ஆண்டு நினைவில்...** | **10ஆம் ஆண்டு நினைவில்...**





**மலர்வு-17.07.1940**
**உதிர்வு-26.06.2001**

அமரர்
**திருமதி. வேலாயுதபிள்ளை பராசக்தி**
(கண்டாவளை)

வாழ்கின்ற மக்களுக்கு
வரிப்புலிகள் சேனை
வல்லமை பெற்றுய்யவென
வாழ்த்தும்
எம்தாய் உதடு...

**தாயின் மடியில்-21.06.1970**
**தாயக மண்ணில்-28.06.1995**

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி சிறப்புத்தளபதி
**லெப். கேணல் கில்மன் (காந்தன்)**
**வேலாயுதபிள்ளை-சிவகுமார்**
(கண்டாவளை)

வேங்கையாய் நீ வாழ்ந்ததும்
பகையதிர நீ பாய்ந்ததும்
ஒருவரலாற்றின்
வியாபகமாய்
எம நெஞ்சுக்கூட்டுக்குள்...

**கில்மனுடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும்**
**இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**கிளிநொச்சி.**

**உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

(6306)

# ஆயுத கொள்வனவு ஊழல் பற்றி விசாரிக்க மத்திய அரசு கோரிக்கை

வாஜ்பாய் ஆட்சியின் போது நடந்த 12 ஆயுத கொள்வனவு ஊழல்கள் பற்றி விசாரணை நடத்த சி.பி.ஐ.யை மத்திய அரசு கோரியுள்ளது. வாஜ்பாய் தலைமையில் தே.ஜ.கூட்டணி ஆட்சி நடந்தபோது கார்கில் போரில் இறந்த இந்திய வீரர்களுக்கு சவப்பெட்டிகள் வாங்கியது உட்பட 24 ஆயுத பேரங்கள் நடந்தன. அவை பற்றி விசாரணை நடத்த சி.பி.ஐ.யை தற்போதைய மத்திய அரசு கேட்டுக் கொண்டது.

அந்த ஆயுத ஒப்பந்தங்கள் பற்றி விசாரிக்க மேற்கொண்டு தகவல்களும் முறையான புகாரும் தரவேண்டும் என்று சி.பி.ஐ கூறியது. அதைத் தொடர்ந்து 12 ஆயுத ஒப்பந்தங்கள் பற்றிய புகாரையும் விவரங்களையும் சி.பி.ஐ.யிடம் மத்திய அரசு கொடுத்துள்ளது. மத்திய அரசு கொடுத்துள்ள புகார்களை சி.பி.ஐ.யின் சட்டப்பிரிவு ஆராய்ந்து அதன் பிறகு பூர்வாங்க விசாரணை நடத்துவதா அல்லது முறையான விசாரணையை தொடங்குவதா என்பது பற்றி முடிவு செய்யும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வாஜ்பாய் ஆட்சியில் நடந்த ஆயுத பேரங்களில் சில வருமாறு:-

தானியங்கி எறிகுண்டு செலுத்திகள் வாங்கியது (ரூ.52.13 கோடி), குண்டு துளைக்காத உடல் கவசங்கள் வாங்கியது (ரூ.51.65 கோடி), பல நோக்கு பயன்பாடு காலணிகள் வாங்கியது (ரூ.30.37கோடி), மின் உற்பத்தி மற்றும் சாதனங்கள் வாங்கியது (ரூ.28.25 கோடி), தூங்கும் பைகள் வாங்கியது (ரூ.20.69 கோடி) கண்காணிப்பு ரேடார்கள் வாங்கியது (ரூ.9.86 கோடி), துப்பாக்கிகள் வாங்கியது (ரூ.9.54 கோடி). மேற்கண்ட ஆயுத பேரங்களில் எவை பற்றி சி.பி.ஐ விசாரணை நடத்த மத்திய அரசு கோரியுள்ளது என்பது தெரியவில்லை.



குடும்ப நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் கொல்காத்தா சென்றார் விமானநிலையத்தில் வைத்து மேற்குவங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா பிரதமரை வரவேற்றபோது

# பேருந்து சிற்றூர்தி நேரெதிரே மோதியதில் எட்டுப் பேர் உடல் நசுங்கிப் பலி

தமிழகம் மாமல்லபுரம் அருகே தனியார் நிறுவன ஊழியர்கள் சென்ற சிற்றூர்தியும் எதிரே வந்த பேருந்தும் நேருக்குநேர்மோதிக் கொண்டதில் சிற்றூர்தியில் பயணம் செய்த எட்டுப் பேர் பலி ஆனார்கள். மேலும் ஆறு பேர் காயம் அடைந்தனர். இச்சம்பவம் பற்றி தெரியவருகையில் நேற்று முன்தினம் அதிகாலை சுமார் இரண்டு மணி அளவில் மாமல்லபுரம் அருகே கிழக்கு கடற்கரை வீதி திருவடந்தை அருகில் சிற்றூர்தி வந்து கொண்டு இருந்தது.



அப்போது முன்னால் சென்ற ஒருவாகனத்தை சிற்றூர்தி ஓட்டுனர் முந்த முயன்ற போது எதிரே சென்னையில் இருந்து மயிலாடுதுறை செல்லும் அரசு பேருந்து வந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் அரசு பேருந்தும் சிற்றூர்தியும் நேருக்கு நேர் பயங்கரமாக மோதின. இதில் பேருந்தின் முன்பகுதி நொறுங்கியது. சிற்றூர்தி சுக்குநூறாக நொறுங்கியது. சிற்றூர்தியில் பயணம் செய்த தனியார் நிறுவன ஊழியர் எட்டுப் பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் பலி ஆனார்கள். மேலும் ஆறு பேர் காயமடைந்தார்கள்.

# சந்திரசேகருக்கு எலும்பு புற்றுநோய்

முன்னாள் இந்தியப் பிரதமர் சந்திரசேகர் சில மாதங்களாக உடல்நிலை பாதிப்படைந்து படுத்த படுக்கையாக உள்ளார்.79வயதான அவர் எலும்பு பலவீனமாகி சுருங்கிவிட்டது. அவரை எலும்பு புற்றுநோய் தாக்கி இருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

இதுபற்றி அவர் கூறியதாவது; முதுகுவலியால் அவதிப்பட்ட எனக்கு எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுத்துப்பார்த்த மருத்துவர்கள் எலும்பு பலவீனமாக இருக்கிறது என்று கூறினர். ஆனால் எனக்கு எலும்பு புற்று நோய் என்று சில பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. ஆனால் இப்போது நான் உற்சாகமாக இருக்கிறேன்.

பிரதமர் மன்மோகன் சிங் என்னை வந்து பார்த்து வெளிநாடு சென்று சிகிச்சை பெறுவதற்கு அனைத்துஉதவியும் செய்யதயார் என்றார். எனது உறவினர்களும் நண்பர்களும் அதே கருத்தை சொன்னார்கள். அது பற்றி நான் இன்னும் முடிவு செய்யவில்லை. இப்போது முதுகுவலி இல்லை.

டில்லி அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன் சென்னை மற்றும் மும்பை மருத்துவர்கள் இருவர் எனக்கு மருத்துவ ஆலோசனை வழங்கி வருகிறார்கள் என்றார் சந்திரசேகரன்.




சர்வதேச போதை ஒழிப்பு மற்றும் போதை கடத்தல் தடுப்பு தினத்தையொட்டி டில்லி பகுதியில் நேற்று முன்தினம் பிரமாண்ட பேரணி நடந்தது. கொட்டும் மழையை பொருட்படுத்தாமல் ஏராளமான தொண்டர்கள் பேரணியில் நடந்து வருவதை படத்தில் காணலாம்.

# ஆளும் கூட்டணியின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களை இடதுசாரிகள் புறக்கணிப்பு

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்க மத்திய அரசு முடிவு செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆளும் கூட்டணியின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களை புறக்கணிக்கப் போவதாக இடதுசாரி கட்சிகள் திடீரென்று அறிவித்து உள்ளன.

மத்தியில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு 61 உறுப்பினர்களைக் கொண்ட இடதுசாரிக் கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவு அளித்து வருகின்றன.

மத்திய அரசு எடுக்கும் சில முடிவுகளுக்கு கொள்கை ரீதியாக இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இலாபத்தில் இயங்கும் பாரத மிகுமின் நிறுவனம் உள்ளிட்ட ஒன்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்க மத்திய அரசு முடிவு செய்து இருப்பதற்கு இடதுசாரிக் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக நேற்று முன்தினம் டெல்லியில் இடதுசாரிக் கட்சி தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.. இதில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்க மத்திய அரசு முடிவு செய்தது. குறைந்தபட்ச பொதுச் செயல் திட்டத்துக்கு எதிரானது என்றும் ஆகவே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக வருங்காலங்களில் நடைபெறவிருக்கும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை தாம் புறக்கணிக்கப் போவதாக இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.


## பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலை

## பணிநிலை வெற்றிடங்கள்

கிளிநொச்சி நகரப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையில் பின்வரும் தரத்திலான பணியாளர் வெற்றிடங்களுக்கான நேர்முகப்பரீட்சை 09.07.2005 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் இடம்பெறவுள்ளதால் குறிப்பிட்ட தகுதியுடையோர் 05.07.2005 திங்கட்கிழமைக்குப் பிந்தாமல் தமது விண்ணப்பங்களை "நிர்வாக அலுவலர் ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை வட்டக்கச்சி" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

| எண் | பணிநிலை விபரம் | வேண்டப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 01 | தொழிற்சாலை முகாமையாளர் | தொழிற்சாலை முகாமைத்துவத்தில் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் தொழிற்சாலையின் வர்த்தகப் பிரிவு இவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருக்கும். |
| 02 | உற்பத்தி முகாமையாளர் | பாற்பொருள் உற்பத்தியில் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உற்பத்திப் பொருட்களின் தரக்கட்டுப்பாடு இவரின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் இருக்கும். |
| 03 | தொழிற்சாலை மேற்பார்வையாளர் | க.பொ.த (சா/த) இல் விஞ்ஞானம், கணித பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்கள் சித்தி. |
| 04 | இயந்திர இயக்குனர் | தொழிற்சாலை ஒன்றில் 05 வருடங்களுக்கு குறையாத இயந்திர இயக்குனர் அனுபவம். ஆங்கிலத்தில் பேசத்தெரிந்திருத்தல் அவசியம். தெரிவு செய்யப்படுபவர் வெளிநாடொன்றில் பயிற்சிக்காக அனுப்பப்படுவார். |
| 05 | கணக்காளர் | 03 வருடங்களுக்குக் குறையாத கணக்குப் பதியுனர் தர அனுபவமும் பொதிகளைக் கணனியில் கையாளும் திறமையும் இருத்தல் அவசியம். |
| 06 | எழுதுனர் | க.பொ.த (சா.த) இல் தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி கணனியில் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. |

ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை
வட்டக்கச்சி.

(சி-12238)

# அஸ்ரா கிண்ண கிரிக்கெட்போட்டி
# சென்பற்றிக்ஸ் அணிக்கு இனிங்ஸ் வெற்றி





பாடசாலைகளுக்கிடையிலான அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டியில் சென்பற்றிக்ஸ் அணிக்கும் கிளிநொச்சி ம.வி. 15வயது அணிக்கும் இடையிலான போட்டியில் சென்பற்றிக்ஸ் அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது. முதல் இனிங்ஸ்சிற்காக துடுப் பெடுத்தாடிய கிளி/ ம.வி. அணி 28 ஓவர்களில் அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சி. கிருபாகரன் 18, க.செந்தூரன்16, ஆ.அனுசாந் 11 ஓட்டங் களை பெற்றனர். பந்து வீச்சில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பாக கேதீசன் ஐந்து, லவதீசன் இரண்டு, மிலாண்டா இரண்டு , கஜமுகன் ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்., பதிலுக்கு தனது முதலாவது இனிங்சிற்காகத் துடுப்பெடுத்தாடிய சென்பற் றிக்ஸ் கல்லூரி அணியினர் 33.4 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக் களைக் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் நவதீசன் 76, மனோஜ் 44,நிலோசன் 28, றெகலேசன் 18 ஓட் டங்களை பெற்றனர். பந்துவீச்சில் வா.சஞ்சீவன் மூன்று,மற்றும் ஆ.அனுசாந், க.சஞ்சீவன், துசிகாந் தலா ஒவ்வொரு விக் கெட்டுக் களையும் வீழ்த்தினர். தனது இரண்டாது இன்னிங்சை ஆடிய கிளி. ம.வி. அணியினர் 18 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் சி.கிருபாக ரன்14, வா.சஞ்சீவன் 14 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் மகதீசன் ஐந்து, லவதீசன் மூன்று,கெமில்டன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இதன்படி சென்பற்றிக்ஸ் அணியினர் இனிங்ஸ் வெற்றியைப் பெற்றனர்.மேற்படி போட்டி கிளிநொச்சி மத்திய மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### லெப். கேணல் கங்கைஅமரன் நினைவாக

# கால்பந்து சுற்றுப்போட்டியில் தேவன்பிட்டி வி.கழகம் வெற்றி

மாவீரர் லெப்கேணல் கங்கை அமரரின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று மன்னாரில் நடை பெற்று வருகிறது.

இப்போட்டிகள் மன்னார். மாவட்ட விளையாட் டுத்துறை பொறுப்பாளர் நிலான் தலைமையில் மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்றது. இப் போட்டியின் முதல் போட்டியாக வங்காலை புனித அன்னம்மாள் விளையாட்டுக்கழகம் தேவன்பிட்டி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதியது. இதில் தேவன்பிட்டி விளையாட்டுக்கழகம் மூன் றிற்கு ஒன்று என்ற கோல் கணக்கில் அன் னம்மாள் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது. போட்டிகள் தொடர்ந்தும் நடைபெறு கின்றன. (மி)

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி முழங்காவிலில் நாளை ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் பூநகரி விளையாட்டு அபிவிருத்தி சங்கம் நடாத்தும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் இச் சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் கலந்துகொள்ள ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கழகங்கள் உரிய நேரத்திற்கு சமூகம் கொடுத்து உதவுமாறு விளையாட்டு அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (சோ)

# முக்கோணக் கிண்ண கிரிக்கெட்போட்டி
# இங்கிலாந்துக்கு ஐந்து விக்கெட் வெற்றி



மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் இங்கி லாந்து அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வங்களா தேசத்தைத் தோற்கடித்தது.

அவுஸ் திரேலியா,இங் கிலாந் து, வங்களாதேசம் இடையேயான மூன்று நாடுகள் கிரிக்கெட்போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஏழாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வங்களாதேச அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய வங்களாதேச அணி நிர்ணயிக் கப்பட்ட 50 ஓவர்களில் ஏழு விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டம் எடுத்தது.

அதிகபட்சமாக ஜாவித் ஓமர் 81 ஓட்டமும், காலித் மசூத் 42 ஓட்டமும், தங்கர் இம்ரான் 32 ஓட்டமும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் அதிகட்சமாக பிளின்டொப் நான்கு விக்கெட் டுக்களைக் கைப்பற்றினார்.

209 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி 38.5 ஓவர்களில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 209 ஒட்டம் எடுத்து ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக ஸ்ரோஸ் 98 ஓட்டமும், ரெஸ்கொதிக் 43 ஓட்டமும் எடுத்தனர். வங்களாதேசம் தரப்பில் மஞ்சுரால் மூன்று விக்கெட்டுக்களையும், முகமது ரபீக் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# வருடாந்த விளையாட்டு விழா

விசுவமடு தென்னிந்திய திருச்சபையின் பகல் பராமரிப்பு பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுவிழா கடந்த 25ஆம் திகதி காலை 9.40 மணிக்கு மு/இருட்டுமடு தமிழ் வித்தியலாய அதிபர் செ. கலாதேவன் தலை மையில் நடைபெற்றது.

நிகழ்வின் மங்கல விளக்கை தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் திட்ட இணைப்பாளர் ரட்ணவேல், அதிவணக்கத்துக்குரிய டி.எஸ். அம்பலவாணர் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியை விசுவமடு பிரதேச அரசியல்துறைபொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றினார். வரவேற்புரையை விசுவமடு தென் னிந்திய திருச்சபை போதகர் தேவராசா அடிக ளார் நிகழ்த்தினார். ஆசியுரையை டி.எஸ். அம்பலவாணர் நிகழ்த்தினார். தொடர்ந்துவிளை யாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. உடற்பயிற்சி, பலூனில் ஏறியிருந்து உடைத்தல், நிறம், தீட்டுதல், சாக் ஓட்டம் ,வினோத உடை எனப் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதியாக முன்பள்ளி சிறார்களுக்கு டி.எஸ். அம்பலவாணர் ஓய்வுபெற்ற கி.சே. இராஜரட் ணம், போதகர் தேவராசா அடிகளார் உட்பட பலர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (14)

# முன்பள்ளி மாணவர்களின் மரதன் ஓட்ட நிகழ்வு

உடையார்கட்டு தெற்கு விவேகானந்தா முன்பள்ளியின் விளையாட்டுவிழாவின் ஆரம்ப நிகழ்வான 900 மீற்றர் மரதன் ஓட்டம் ஐந்து வயது மாணவர்களிற்கும், மூன்று, நான்கு வயது மாணவர்களிற்கான 500 மீற்றர் ஓட்ட நிகழ்வும் கடந்த வியாழனன்று காலை 9.00 மணிக்கு [illegible]டையார்கட்டு தெற்கு குரவில் வீதியில் [illegible] முன்பள்ளியில் முடிவடைந்தது. [illegible]நிகழ்வு ஏ.ஓ.எம்.ஓ. கராத்தே கழகத்தின் [illegible] முன் பள்ளி பெற்றோர் [illegible] தலைவர் செ. அசோக்குமார் [illegible] இடம்பெற்றது. இந்நிகழ்வில் குரவில் தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர் முன்பள்ளி மாணவர்களின் [illegible]றோர்கள், [illegible] அனை [illegible] கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(19)

# கான்படரேஷன் கோப்பைக் கால்பந்து
# இறுதிப் போட்டியில் பிரேசில் - ஆர்ஜென்டீனா



காண்படரேஷன் கோப்பை இறுதிப் போட்டிக்கு பிரேசில் தகுதிபெற்றது. அபாரமாக ஆடிய அட்ரியானோ இரண்டு கோல் அடித்து அணிக்கு வெற்றி தேடிக்கொடுத்தார்.

ஜேர்மனியில் எட்டு நாடுகள் பங்கேற்கும் கான்படரேஷன் கோப்பைக் கால்பந்துத்தொடர் நடக்கிறது.முதல் அரையிறுதிப் போட்டி நியூரம் பர்க் நகரில் கடந்த சனியன்று நடந்தது. இதில் உலக சம்பியனான பிரேசில், ஜேர்மனி யைச் சந்தித்தது. சமபலம் பொருந்திய இரு அணிகள் மோதுவதால் அரங்கில் ரசிகர்கள் கூட்டம் நிரம்பிக் காணப்பட்டது. முன்னதாக, 2002 உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் ஜேர்மனி, பிரேசிலிடம் தோற்றுக் கோப்பையை இழந்தது.

இதற்குச் சொந்தமண்ணில் பதிலடி கொடுக் கும் நோக்கத்துடன் ஜேர்மனி களமிறங்கியது தொடக்கத்தில் பிரேசில் அணி கோல் அடித்து முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் அட்ரியானோ அபாரமாக கோல் அடித்தார். அடுத்த இரண்டாவது நிமிடத்தில் இதற்குப் பதிலடி கொடுத்தது ஜேர்மனி 23 ஆவது நிமிடத்தில் இந்த அணியின் லுகாஸ் போடோல்ஸ்கி, செபாஸ்டியன் டெய்ஸ்லர் அளித்த வாய்ப்பைப் பயன்படுத்தி பந்தைத் தலையால் முட்டிக் கோல் அடித்தார். இதன் பின் 43 ஆவது நிமிடத்தில் பிரேசில் அணிக்கு பெனலாட்டி வாய்ப்புக் கிடைத்தது.

நட்சத்திரவீரரான ரொனால் டினோ இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் பிரேசிலின் இந்த முன்னிலையும் அதிக நேரம் நீடிக்கவில்லை.முதல் பாதியின் கடைசி நொடிகள் நெருங்கிக் கொண்டிருந்த நிலையில் ஜேர்மனியின் மைக்கேல் பாலக்பெனாட்டி வாய்ப்பு மூலம் கோல் அடித் தார். இதன் மூலம் இரு அணிகளும் 2-2 என்ற சமநிலையில் இருந்தன.

பின்னர் இரண்டாவது பாதியில் மீண்டும் அட்ரியானோ அசத்தினார். 76ஆவது நிமிடத்தில் இவர் அடித்த அபாரமான கோல் அணியின் வெற்றிக்கு வித்திட்டது.தனது கால்பந்து வாழ்க் கையில் அட்ரியானோ அடிக்கும் 250 ஆவது கோல் இது. இதன்பின் பிரேசில் வீரர்கள் முழு மையாகத் தற்காப்பு ஆட்டத்திற்கு மாறினர்.



இதனால் சமன்செய்யப் போராடிய ஜேர்மனி ஏமாற்றமடைந்தது. இறுதியில் பிரேசில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை மற்றொரு அரையிறுதி ஆட் டத்தில் ஆர்ஜென்டீனா-மெக்சிகோ அணியுடன் மோதியது. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட் டத்தில் முதலில் மெக்சிகோ வீரர் கார்லோஸ் ஒரு கோல் அடித்தார். இதனால் அந்த அணி முன்னிலை பெற்றது. சிறிது நேரத்தில் ஆர் ஜென்டீனா வீரர் லுசியானோ ஒரு கோல் அடித் தார்.

பின்னர் கடைசிவரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் பெனாட்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது இதில் ஆர்ஜென் டீனா 6-5 என்ற கோல் கணக்கில் மெக்சி கோவைத் தோற்கடித்தது.


வரும் 29 ஆம் திகதி நடைபெறும் இறு திப்போட்டியில் ஆர்ஜென்டீனா, பலம் வாய்ந்த பிரேசில் அணியை எதிர்கொள்கிறது.அன்று நடைபெறும் மூன்றாவது இடத்துக்கான ஆட் டத்தில் ஜேர்மனி -மெக்சிகோ அணிகள் மோது கின்றன.






கலிபோர்னியாவின் கார்ஸன் நகரில் நடந்த அமெரிக்க தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பிரிவில் வெற்றி எல்லையை ஆக்ரோசமாக கடக்கிறார் ஜஸ்டின் காட்லின் (இடது). இந்தப் போட்டியில் பிரபல வீரரான மவுரீஸ் கிரீன் (நடுவில்)காயம் காரணமாக வெளியேறினார்.

## சிந்தனைக்கு



தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக்கொள்ளும் பொழுதுதான் ஒருதேசம் தனக்கே உரித்தான-தனித்துவமான -ஆளுமையைப் பெறுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## வரலாற்று நிர்ப்பந்தம்!

"பண்டாரநாயக்க குடும்பத்தினர் நாட்டை ஒருபோதும் காட்டிக் கொடுக்கமாட்டார்கள் என உறுதியளித்தவர்கள் இன்று ரணில் விக்கிரமசிங்கவின் காட்டிக்கொடுப்பைவிட மேலே சென்று பயங்கரமானதொரு காட்டிக்கொடுப்பை பொதுக்கட்டமைப்பின் மூலம் ஏற்படுத்தியுள்ளனர். இதனை வரலாறு மன்னிக்காது" என்கின்றார் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளரான விமல்வீரவன்ச.

ஆனால், விமல்வீரவன்சவின் கூற்றுக்கள் போன்று ரணில் விக்கிரமசிங்கவையும், சந்திரிகா குமாரதுங்கவையும் வரலாறு, தண்டிக்கின்றதோ இல்லையோ , ரணில் விக்கிரமசிங்கவினதும், சனாதிபதி சந்திரிகாவினதும் நடவடிக்கைகள் வரலாறு அவர்களுக்குக் கொடுத்த நிர்ப்பந்தம் என்பதை எவருமே மறுக்கமுடியாது.

ஏட்டிக்குப் போட்டியாக இவ்விரு கட்சிகளும் நடாத்திய இனவாத அரசியலானது இறுதியில் அவர்களைப் பெரும் அவலத்திற்குள், நெருக்கடிக்குள் தள்ளிவிட்டன என்றே கூறலாம். இதன் விளைவுகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் முகம்கொடுக்க வேண்டி வந்ததெனலாம்.

ஒரு கட்டத்தில் ஏட்டிக்குப் போட்டியாகத் தமிழ்மக்களின் உரிமைகளைப் பறித்தெடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் போட்டியிட்டனர் என்பது வரலாறு. இந்நிலையில் தமிழ்மக்களின் உரிமைகளைப்பறித்தெடுப்பதன் மூலம் தமது இருப்பை, ஆட்சியை நிலை நிறுத்திக்கொண்டனர் எனலாம்.

அன்று ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு இத்தகைய போட்டி அவர்களுக்குத் தேவைப்பட்டதொன்றாகியிருந்தது. ஆனால், இன்று சூழ்நிலையில் எதிர்மாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்மக்கள் தமது உரிமைக்கான போராட்டத்தில் ஓர் மைல் கல்லை எட்டியுள்ளனர். இன்று சிறிலங்காவில் ஆட்சிபீடம் ஏறுபவர்கள் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தைப் புறம்தள்ளிவிட முடியாததொரு நிலையில் உள்ளனர்.

இதன் வெளிப்பாடே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததும் விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்ள வேண்டியதாகியது. இது இலங்கையில் அமைதியை நிலைநாட்டுவதற்கு மட்டும் அவசியமானதாக இருக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கும், தக்கவைப்பதற்கும் அவசியமானதாகவிருந்தது.

அதாவது, அன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச்செய்துகொள்ளாமல் ஆட்சியில் இருக்க/ ஆட்சியை நடத்த முடியாததென்ற நிலையே இருந்தது. இந்நிலையில் தான்.நோர்வேயின் அனுசரணையுடன் யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தானது.

இவ் யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய அன்றும் ஜே.வி.பி இன்று போலவே கூச்சலிட்டது. அதாவது நாட்டின் இறைமைக்கும், ஐக்கியத்திற்கும் இவ் யுத்தநிறுத்த உடன்பாடுஅச்சுறுத்தலானது என்றனர். ஆனால் ரணில் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐ.ம.சு முன்னணி கட்சி வந்தபோதும் அவர்கள் எதிர்த்த யுத்தநிறுத்த உடன்பாட்டைக் கைவிடவில்லை.

அதாவது ரணில் விக்கிரமசிங்க சிங்கள அரசாங்கத்திற்கு மட்டுல்ல ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்திற்கும் தேவையானதாக அவசியமானதாக இருந்தது. ஆகையினால் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு எதிராகக் கூச்சல் போட்டாலும் அதனைக் கைவிட ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் தயாராக இருக்கவில்லை.

இந்தவகையில் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவர்கள் மீதான நிர்ப்பந்தமாகியது. இது போன்றே இன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருந்தார். வேறுவிதமாகக் கூறுவதாயின் பொதுக்கட்டமைப்பை ஏற்றுக் கொள்வது அவருக்கு அவசியமானதேவையொன்றாக இருந்தது. ஆனால் பொதுக்கட்டமைப்பு அமுலாக்கப்படுமா? என்பது வேறு விடயம்.

இந்த வகையில் ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமது கடந்தகால நடவடிக்கைகளுக்குப் பிரதியுபகாரமாகவே இவற்றை மேற்கொள்ளவேண்டியவர்களாக இருந்தனர். இந்த வகையில் பண்டாரநாயக்க குடும்பத்தின் செயற்பாடுகளுக்குச் சனாதிபதி சந்திரிகாவும், ஐ.தே. கட்சியின் செயற்பாடுகளுக்கு ரணிலும் இன்று பொறுப்பேற்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இத்தகையதொருநிலையே ஜே.வி.பி தற்பொழுது மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அவர்களேபொறுப்பேற்க வேண்டியதாயிருக்கும். அத்தோடு எவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளை விட சந்திரிகாவின் நடவடிக்கை -ஜே.வி.பி யின் கூற்றில் காட்டிக்கொடுப்பு- மோசமானதென்று ஜே.வி.பி கூறுகின்றதோ அதை விட மேலானதாக ஜே.வி.பி தனது பங்கிற்குச் செய்தாக வேண்டியதாக இருக்கும்.

# போராளிகளின் வாகனம்மீதான தாக்குதலுக்கு கிளி.மாவட்ட வெகுசன ஒன்றியம் கண்டனம்

(அலவலகசெய்தியாளர்)

சிறிலங்கா அரசு படைகளினதும் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரதும் வழித்துணையுடன் பயணித்த அரசியல்போராளிகள் நேற்றுமுன்தினம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளான செயலை கிளிநொச்சி மாவட்ட வெகுசன ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் நாகரிகமானஅரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் அரசியல்போராளிகள், பொதுமக்கள் ஊடகத்துறையினர் மீது மேற்கொள்ளும் இக்கொலை முயற்சிகள் சமாதான நீடிப்பை இல்லாது செய்துவிடும் என நாம் அச்சமடைகிறோம்.

இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவோரை உடன் இனம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தவும் இனிவரும் காலங்களில் இத்தகைய கொலைகளையும், கொலை முயற்சிகளையும் தடுத்து புதிய பாதுகாப்பு நடைமுறைகளை ஏற்பாடு செய்யுமாறு அவசர வேண்டுகோள் விடுக்கிறோம்.

உலக சமுதாயம் வகுத்துள்ள நல்லிணக்க முறைகளின்படி தீர்வுகாண வேண்டுமெனும் உயரிய சிந்தனையே புரிந்துனர்வு உடன்பாட்டில் எமது தேசியத் தலைவரை கையெழுத்திட தூண்டியது. இத்தகைய நன்நோக்கிற்கு களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என உருக்கமான வேண்டுகோளை முன்வைக்கின்றோம். எமது இந்தக் கோரிக்கையை தங்களின் உயர் நடவடிக்கைக்கு உட்படுத்தாவிடின் எமது போராளிகளை தமது சுயபாதுகாப்பிற்காக ஆயுதங்களுடன் இராணுவப் பிரதேசத்திற்கு சென்றுவர அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இத்தகைய கோரிக்கை ஒன்றை நாம் முன்வைப்பதற்கு தங்களுடைய பாதுகாப்பு பிரதேசத்திலுள்ள பாதுகாப்புப் படையினரின் பலவீனங்களே காரணம் என்பதை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே சமகால நிலைப்பாடுகளை புரிந்து கொண்டு தமிழ்மக்கள் முன்வைத்துள்ள சமாதானப்பாதையை எச்சந்தர்ப்பத்திலும் குழப்பிவிடாத வகையில் சிறிலங்கா அரசு தமது நிலைப்பாட்டை பரிசீலனை செய்ய வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புவேண்டுகோள் விடுக்கிறது. (சோ)

# ஆர்ப்பாட்டங்களை ஒளிப்பதிவு செய்ய சிறில.பொலிஸ்மா அதிபர் உத்தரவு

## ஆர்ப்பாட்டக்காரர் மீது கடும் நடவடிக்கை எடுக்க முடிவு

(கொழும்பு)

தெற்கில் பரவலாக இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆர்ப்பாட்டங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்வதன் மூலம் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருபவர்களை இலகுவாக இனங்காண முடியும் என்றும், இவ்வாறு ஆர்ப்பாட்டங்களை நடத்தி பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைக்குப் பங்கம் விளைவிப்பவர்களை கைதுசெய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பொதுக் கட்டமைப்புக்கு எதிரான பல ஆர்ப்பாட்டங்கள் இவ்வாறு ஒளிப்பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்த பலர் இனங்காணப்பட்டு விரைவில் கைது செய்யப்பட விருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் தகவல் தெரிவித்துள்ளார்.ஆர்ப்பாட்டக்காரர்களாக அடையாளம் காணப்பட்ட பலர் பல்கலைக்கழக மாணவர்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் நாட்களில் நாட்டில் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுவருவதாக தமக்குப் புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும், இந்த ஆர்ப்பாட்டங்களையும் வீடியோ பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும், பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார். பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை நடாத்தப் போவதாக ஜே.வி.பி அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சட்டத்தை அவமதிக்கும் வகையில் இடம்பெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் பொதுச் சொத்துக்களும், தனியாருடைய வாகனங்களும் சேதமடைவதாகவும், இவற்றைத் தடுக்கும் நோக்கிலேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுப்பிரயோகம் மேற்கொள்ளவேண்டி ஏற்படுவதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினர் நடாத்திவரும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக பொலிஸ் திணைக்களம் விழிப்பாக இருப்பதாகவும் தெரிவித்த பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, இந்தக் கட்சிகளின் தலைவர்கள் நாட்டின் சட்டத்தை பாதிக்காத வகையில் தமது எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்ற சுற்று வட்டத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு பொலிசார்மேற்கொண்ட கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலில், ஐக்கிய தேசியக் கட்சியின்பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் படைக்கு எவரையாவது சேர்த்திருக்கிறார்களா?

## சிறிலங்கா நிதியமைச்சர் சரத் அமுனுகம கேள்வி



பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் உண்ணாவிரதத்தைத் தவிர வேறு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லையென நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். கண்டி ஹதறலியத்த பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கண்டியில் உண்ணாவிரதமிருக்க எவரால் முடியாதென இங்கு கேள்வியெழுப்பியிருக்கும் நிதியமைச்சர், உயிர்த்தியாகம் செய்வதற்கு முன்வருபவர்களுக்கு கண்டியிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ அவ்வாறு செய்வது ஒன்றுதான் எனக் கூறியுள்ளார்.

எனினும் அச்சம் காரணமாகவே இவர்கள் யாழ்ப்பாணத்தில் அவ்வாறு செய்வதில்லையெனவும் குறிப்பிட்டிருக்கும் நிதியமைச்சர் சரத் அமுனுகம, வெறுமனே பத்திரிகைகளுக்குச் செய்திகளை வெளியிடுவதைத் தவிர வேறு எதையும் இவர்களால் செய்ய முடியவில்லையெனவும் கூறியுள்ளார். பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவப் படைகளை உருவாக்கியுள்ளார்களா? எனவும், அவற்றுக்கு எவரையாவது சேர்த்துள்ளார்களா? எனவும் நிகழ்வில் கேள்வியெழுப்பியுள்ளார். இதற்குப் பதிலாக இராணுவத்திலிருந்து தப்பியோடுவோருடைய எண்ணிக்கை அதிகரித்துள்ளதையே காண முடிவதாகவும் நிதியமைச்சர் சரத் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுக்கட்டமைப்பை ஆதரித்து அறிக்கைகள் விட வெளிநாடுகளை வலியுறுத்துகிறது சிறிலங்காஅரசு

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பை ஆதரித்து அறிக்கைகளை வெளியிடுமாறு வெளிநாடுகளை சிறிலங்கா அரசு வலியுறுத்தி வருகிறது.

வெளிநாடுகளில் உள்ள தமது தூதரகங்களைத் தொடர்புகொண்டு இத்தகைய அறிக்கைகளை அந்தந்த நாடுகளிடம் பெற்றுத் தருமாறு சிறிலங்கா வெளிவிவகார அமைச்சும், சிறிலங்கா சமாதானச் செயலகமும் பணித்திருக்கின்றன.

சிறிலங்காவில் அதிகரித்து வரும் பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையிலேயே சர்வதேச நாடுகளின் ஆதரவை தங்கள் அமைச்சு இந்த நடவடிக்கை மூலம் மேற்கொண்டுள்ளதாக வெளி விவகார அமைச்சக அதிகாரி ஒருவர் கூறினார்.

**தென்மராட்சியில்...**



**தீவகத்தில் ...**






# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பிற்கு சிறிலங்கா படைத்தரப்பும் எதிர்ப்பாம்!

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை சிறிலங்கா படைத்தரப்பின் ஒரு பகுதியினரும் எதிர்த்துள்ளனர்.

கடலோரப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிற இந்த மீளமைப்புப் பணிகள் குறித்து படையினரிடம் குறிப்பாக கடற்படையினரிடம் ஆலோசனை நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்தப் பொதுக்கட்டமைப்பின்படி திருகோணமலை துறைமுகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு கைமாறுகிறது என்றும், ஆழிப்பேரலை மீளமைப்புப்பணிகள் மூலம் தமிழர் பிரதேச கடலோரங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் காலூன்றிவிடுவர் என்றும் இராணுவத்தின் ஒரு தரப்பினரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பொதுக்கட்டமைப்பு நடைமுறைக்கு வந்தால் வடகிழக்கிலுள்ள தமது கடற்படை முகாமுக்கு பத்து அடி தூரத்திலேயே ஆழிப்பேரலை மீளமைப்பு முகாம்களும் அமைக்கப்படும். அப்போது தாங்கள் என்ன செய்வது என மேலதிகாரிகளிடமும் கேட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# சுகாதார உள்ளக செயலமர்வு இன்று கிளிநொச்சியில் இடம்பெறும்

வடக்கு கிழக்கு சுகாதார மேம்பாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பைத்திரட்டும் வகையிலான உள்ளக செயலமர்வு இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ சுகாதார சேவையின் ஏற்பாட்டில் இன்று காலை பத்துமணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகத்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் தமிழர் தாயகப் பகுதிகளில் கடமைபுரியும் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் யாழ். போதனாவைத்தியசாலைப்பணிப்பாளர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக்கல்லூரி அதிபர்கள், வன்னிப்பிராந்திய வைத்திய அதிகாரிகள், தமிழர்புனர்வாழ்வுக்கழகம், பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகம், பொருண்மிய மதியுரையகம், நலவாழ்வு அபிவிருத்திநிறுவனம், அரசியல்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட பெருமளவானவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் செயலமர்வில் தமிழர் தாயகத்தின் சுகாதார நிலை, அதனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகளுக்கான முன்மொழிவுகள் என்பன இடம்பெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (லோ)

# “வெற்றி நாட்டுக்கு–எதிர்காலம் உங்களுக்கு” 10,000 விழிப்புணர்வு கூட்டம் நடத்த ஜே.வி.பி முடிவு

(கொழும்பு)

“வெற்றி நாட்டுக்கு-எதிர்காலம் உங்களுக்கு” எனும் தலைப்பில் மக்கள் விழிப்புணர்வு கூட்டங்களை நாடு முழுவதும் மேற்கொள்ள ஜே.வி.பி திட்டமிட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்தத் திட்டங்களை அக்கட்சி செயற்படுத்தவுள்ளது.இத்திட்டத்தின் கீழ் 10,000 கூட்டங்களை நடத்தவும், ஊர்வலங்களை நடத்தவும் ஜே.வி.பி முடிவுசெய்துள்ளது.

அரசாங்கத்தில் இருந்து விலக எடுத்த தீர்மானம், தற்போதைய அரசியல் நிலவரம் ஜே.வி.பி யின் எதிர்கால செயற்பாடுகள் என்பன பற்றி இதன் போது மக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக கைநூல் ஒன்றும் ஜே.வி.பி யால் வழங்கப்படவுள்ளது.

## இராணுவத்தினரின்...,

கொள்ளவிரும்புகிறோம்.

இம்மாதம் முற்பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த மட்டக்களப்பிற்கான எமது போராளிகளின் பயணத்தின்போது இராணுவப்புலனாய்வுப் பிரிவினர் ஏனையஆயுதக் குழுக்களுடன் சேர்ந்து அத்தொடரணியை வெலிக்கந்தப் பகுதியில் வைத்துத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார்கள் என எமக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் பின்னர் இந்தப் பயணம் இடைநிறுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக எமது போராளிகளின்பயணம் இடைநிறுத்தப்பட்ட பின்னர் இராணுவத்தினர் மற்றும் கண்காணிப்புக்குழுவினரது வாகனப்பாதுகாப்பைவிட மேலதிகமாக குறிப்பிட்ட தொகை இராணுவத்தினர் எமது உறுதிப்பினர்கள் பயணம் செய்யும்வாகனத்திலும் இருப்பார்கள் என்ற உடன்பாட்டிற்கு இருதரப்பினரும் வந்ததை நீங்கள் அறிவீர்கள் எமது போராளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஏன் இராணுவத்தினர் எமது போராளிகள் பயணம் செய்த வாகனத்தில் இருக்கவில்லை? என்பது எமக்குத் தெரியவில்லை. சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு இருபுறத்திலும் இருந்த காவல் நிலைகளில் இராணுவத்தினர் கடமையில் நின்றபோதும் சம்பவம் இடம்பெற்றபின்னர் அவர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தப் போக்குவரத்து நடவடிக்கை தொடர்பாகவும், தொடரணி எத்தனை மணிக்கு தாக்குதல் நடந்த இடத்திற்கு வரும் மற்றும் பயணிக்கும் வாகனத்தின் வகை என்பனதொடர்பான தகவல்கள் அனைத்தும் இராணுவத்தினருக்கு மட்டுமே தெரிந்திருந்தன.

விடுதலைப்புலிகளின் போக்குவரத்துத் தொடர்பாக ஏற்கனவே தமக்குஅறிவிக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இந்தக் கொலைகள் தவிர்க்கப்பட்டிருக்கும் என மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட போராளிகள் கொலைசெய்யப்பட்டபோது இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு தற்போது நடாத்தப்பட்ட தாக்குதலின் உண்மைநிலையினை எமக்கு வெளிப்படுத்த வேண்டும் என நாம் கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டுக்கொள்கிறோம்.

## பொதுக்கட்டமைப்பை வலு...

இந்த வழக்கில் நிவாரணம் புனர்வாழ்வு,புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எம். எஸ். ஜயசிங்க,விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த சண்முகலிங்கம் றஞ்சன்,சனாதிபதி செயலாளர்,நிதியமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக்கட்டமைப்பில் இருதரப்பினரும் ஒருவருக்கு முன்னர் ஒருவர் அமர்ந்து கைச்சாத்திடாமையினால் இந்த உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளபடாத ஒன்றென மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் ஜயசிங்கவிற்கு சட்டரீதியாக எந்தவொரு அதிகாரமுமில்லை. ஆகையால் அவர் இதில் கைச்சாத்திட்டிருப்பதானது அரசியலமைப்பிற்கு முரணானது எனக்குறிப்பிட்டிருக்கும் மனுதாரர்,

இந்த உடன்படிக்கையினால், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மாத்தறை,காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு எவ்வித நியாயமும் கிட்டப்போவதில்லை எனத்தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்படும் நிதியினை அவர்கள் எவ்வாறு கையாள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள மார்க்கம் எதுவும் இல்லாதிருப்பது மிகவும் பயங்கரமானது. நிதிஒழுங்கு விதிகளுக்கு முரணானதுடன், இந்த சபை பாராளுமன்றத்திற்கு பதில் கூறக்கடமைப்படாத ஒன்றென்பதால் அது நாட்டின் இறைமைக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

அதனால் இந்த உடன்படிக்கை சட்ட விரோதமானது என அறிவிக்குமாறும், இதனை செயற்படுத்துவதை தவிர்க்கும் வகையில் இடைக்கால தடையுத்தரவொன்றை விதிக்குமாறும் மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வழக்கு நாளை மறுதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (32)

## பொதுக்கட்டமைப்பை....

குறிப்பிட்ட பகுதிகளில் இயல்புநிலை நேற்று காலை முதல் பாதிக்கப்பட்டிருந்ததாக அக்கரைப்பற்று பொலிசார் தெரிவித்தனர். ஹர்த்தால் காரணமாக பொதுப் போக்குவரத்துச்சேவை முற்றாக பாதிக்கப்பட்டிருந்தன.

சம்மாந்துறையிலும் இயல்புநிலை பாதிக்கப்பட்டு நகரில் வழமையான செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லையென சம்மாந்துறைப்பொலிசார் தெரிவித்தனர்.

## தமிழீழத்தை...

விதைத்து, இனமுரண்பாட்டைத் தோற்றுவித்து, தங்களது தலைமை அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கிறது. தங்கள் பதவியை, ஆட்சியைத் தக்கவைக்கவே சமாதானம், பேச்சுவார்த்தை தீர்வு என நாடகமாடுகிறது. இதனை இனியும் நம்பவேண்டாம். இவ்வாறான செயல்களால் தமிழ்மக்கள் விடுதலைக்காக அதிக நாள் காத்திருக்க வேண்டியிருக்கும்.

எனவேதான் இறுதிப்போருக்கு ஆணையிடுங்கள் எனக் கோருகிறோம். தீவகத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சிங்களப்படை நிலைகொண்டுள்ளது. சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் இருக்கும்வரை நாங்கள் நிம்மதியாக இருக்க முடியாது. எமது மக்களின் வாழ்விடங்களைவிட்டு சிங்களப்படை முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். தமிழ்மக்கள் உங்கள் பின்னால் அணிவகுத்து நிற்கின்றார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வெல்லும்வரை ஓயமாட்டார்கள்.

பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் மேலாதிக்கத்தை அடக்கி ஆக்கிரமிப்புப்படைகளை வெளியேற்றி இழந்த எமது நாட்டை விடுதலைபெறச்செய்ய தீர்க்கமான முடிவெடுக்கும் காலம் நெருங்கிவிட்டது எமது மக்கள் தங்கள் ஆணைக்கு காத்திருக்கிறார்கள் என்பதை மிகவும் பணிவோடு தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## ஆக்கிரமித்த....

வீதியூடாகக் கண்டி வீதியை அடைந்தது.அங்கிருந்து மிருசுவில் சென்நீக்கிலஸ் தேவாலயத்திற்கு முன்னால் மக்கள் அரை மணித்தியாலம் வீதி மறியலில் ஈடுப்பட்டனர்.

தொடர்ந்து சென்நீக்கிலஸ் ஆலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் படையினர் இம்மண்ணைவிட்டு வெளியேற வேண்டும் என மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் வேண்டுகோள் அடங்கிய மகஜர்களைச் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் பாலச்சந்திரனிடம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி சங்கத்தின் உறுப்பினர் திருமதி சரஸ்வதி தேவாலய வாசலில் வைத்து வழங்கினார்.

சாவகச்சேரி, பிரதேச செயலக உதவி அதிகாரியிடம் மகஜர் ஒன்றினை இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் துரைரட்ணம் வழங்கினார்.

இக்கண்டனப் பேரணியில் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலன், பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ்,சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தீவகத்தில் 10.30 மணிக்கு ஊர்காவல்துறை பாலைக்காட்டுச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி சுருவில் ஊர்காவல்துறை வீதி வழியாக ஊர்காவல்துறைச் சந்தியைப் பேரணி வந்தடைந்தது. அங்கிருந்து யாழ். வீதிவழியாக ஊர்காவல்துறை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவியும் இழுத்துவரப்பட்டு எரிக்கப்பட்டது.

அங்கு யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ப. கனகலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் தீவக மக்கள் நலன்புரிக்கழகத்தின் மூத்த உறுப்பினர் முத்துக் கிருஸ்ணன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து ஐரோப்பிய பாராளுமன்ற ஒன்றியத் தலைவருக்கான மகஜரும், தமிழீழத் தேசியத் தலைவருக்கான மகஜரும் வாசித்துக் காட்டப்பட்டன.

பின்னர் தீவகக்கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதி அஞ்சலோ, தீவகக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய செயலர் ஜீவசீலன் ஆகியோரால் ஐரோப்பிய பாராளுமன்ற ஒன்றியத்தலைவரிற்கான மகஜரினை ஊர்காவல்துறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகன் அவர்களிடம் கையளித்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவருக்கான மகஜரினை யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் ப.கனகலிங்கமும் மற்றும் பிரதிநிதிகளும் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசனிடம் கையளித்தனர். பின் ஊர்காவல்துறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகன் பதிலுரை நிகழ்த்தினார். (33சு,28)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது